# பாதுகாவலன் சிறப்பிதழ்




திருத்தந்தை பிரான்சிஸ்
இலங்கை 2015
ஜனவரி 12-15

தமிழ் மண்ணில் கால்பதிக்கும்

முதல் திருத்தந்தையே!

வருக! ஆசீர் தருக!!



## புனிதராகும்
## இலங்கையின் திருத்தூதர்
## யோசப் வாஸ் அடிகள்

14.01.2015

# புனிதராகும் இலங்கை அப்போஸ்தலர் யோசப்வாஸ் அடிகளின்

# வாழ்வும் பணியும் – வரலாற்றுச் சுவடுகள்

**பிறப்பும், இளமைப்பருவமும், குருப்பட்டமும், இந்தியாவில் ஆரம்ப காலப் பணியும் :**

★ கிறிஸ்தோப்பர் வாஸ், மரியா மிராண்டா எனும் பெற்றோருக்கு மூன்றாவது பிள்ளையாக இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள கோவா மாநிலத்தில் பெனோலிம் என்ற ஊரில் 21 ஏப்ரல் 1651ல் பிறந்தார். பிறந்த 8ம் நாள் அங்குள்ள திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் இயேசு சபைக்குரு யசித்தோ பெரேராவினால் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டார்.

★ சங்குவாலி எனும் ஊரில் ஆரம்பக் கல்வி பயின்றார்.

★ குருத்துவப் பயிற்சிக்கு ஆயத்தமாக பெனோலிம்பில் உள்ள உயர்கல்லூரிக்கு அனுப்பப்பட்டார்.

★ இயேசு சபையால் நடத்தப்பட்ட புனித பவுல் கல்லூரியில் தமது இலக்கணக் (மொழியியல்) கல்வியை நிறைவு செய்தார்.

★ பின் டோமினிக்கன் சபையினரால் நடத்தப்பட்ட புனித தோமஸ் அக்குவைனஸ் உயர் கல்விக்கூடத்தில் மெய்யியல், இறையியல் கற்றார்.

★ 20வது வயதில் (1671ல்) குருத்துவத்துக்கு முன் வழங்கப்படும் பட்டங்களைப் பெற்றார்.

★ 1676ல் கோவா ஆயராகிய சிஸ்ரேர்சியன் சபையினராகிய அந்தோனியோ பிறண்டாவோவினால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

★ போதியளவு பணிப்பொறுப்பு உடன் வழங்கப்படாத நிலையில் தமது சொந்த ஊராகிய சங்குவாலிக்குச் சென்று அங்கு குருவாக வர விரும்பிய மாணவர்களுக்கு இலத்தீன் மொழி கற்பித்தார்.

**இலங்கைப் பணிக்கு அழைப்பு**

■ இலங்கைக் கத்தோலிக்கர் ஒல்லாந்த ஆட்சியினர்களின் கீழ் குருக்களில்லாத நிலையில் வாழ்ந்த பரிதாப நிலை பற்றி அறிந்தார். போர்த்துக்கேயரின் ஆட்சியிலிருந்த தூர கிழக்கு நாடாகிய மக்காவோ சென்று வரும்போது கொழும்பில் தரித்து வந்த கப்பலில் இருந்த கோவாப் பேராலயக்குரு ஒருவர் இலங்கைக் கத்தோலிக்கர் தமது இறை நம்பிக்கையை இழக்கும் நிலையிலுள்ளனர் என்று விளக்கினார்.



■ இலங்கைக்குப் பணியாற்றச் செல்லும் தனது விருப்பத்தை கோவா குருக்கள் அவையில் முன் வைத்தார்.

■ இலங்கைக்கு அனுப்பப்படுவதற்குப் பதிலாக கன்னடாவுக்கு கோவா பேராயரின் பிரதிநிதியாக அனுப்பப்பட்டார். அங்கு 1681ம் ஆண்டு மார்ச் மாதம் தமது மறைபணியை ஆரம்பித்தார்.

■ கன்னடாவில் விசுவாசப் பரப்புதல் சபை / போர்த்துக்கேய சிறப்புரிமையினர் (Propagandists / Padroadists) ஆகியவற்றின் மத்தியில் நிலவிய திரு ஆட்சி நிர்வாகம் பற்றிய சிக்கல்கள், குழப்பநிலைகள் மத்தியில் தாழ்ச்சியுடன் 1684ம் ஆண்டு வரை அரும் பணியாற்றினார்.

■ 1682ம் ஆண்டு பாஸ்கல்டா கொஸ்தா ஜெரமியாஸ் என்ற ஒரு வயதான குருவால் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சி குன்றியிருந்த துறவறசபையில் யோசப் வாஸ் அடிகள் 1685 செப்ரெம்பர் 25ம் திகதியன்று சேர்ந்து புனித பிலிப்பு நேரியாரின் ஒரட்டோரியன் சபை எனும் பெயரில் அதற்குப் புத்துயிர் கொடுத்து வளர்த்தார். பின் 6 மாதமளவு அங்கு பணியாற்றி, 1686ம் ஆண்டு மார்ச மாதமளவில் தெற்கு நோக்கித் தமது பயணத்தை ஆரம்பித்தார். பயணத்தின் இறுதி இலக்கு இலங்கையென்பதை அவர் எவருக்கும் அப்போது வெளியிடவில்லை.

**இலங்கைப் பயணம்**

○ தெற்கு நோக்கிய பயணத்தின் போது, தாம் முன்னர் பணியாற்றிய கன்னரா பகுதிகளில் பணியாற்றிய வண்ணம் 1687ன் முற்பகுதியில் கேரளாவிலுள்ள நெல்லிச்சேரிக்கு வந்தார். இங்கு தமது இலங்கைப் பயணத்திட்டத்தை வெளிப்படுத்தியபோது துணைக்கு வந்த மற்ற மறைப்பணியாளர் இலங்கை செல்லப் பயத்தினால் பின்வாங்கவே தமது பணியாளனாகிய யோனுடன் இறுதிக்கட்ட பயணத்தை மேற்கொண்டு கொச்சின், தோப்பு வழியாக 1687 மார்ச்சில் தூத்துக்குடி வந்து சேர்ந்தார். அங்கிருந்த நாட்களில் ஓரளவு தமிழ் கற்றார்.

○ 1687 ஏப்ரல் மாதம் தூத்துக்குடியிலிருந்து இலங்கையின் யாழ்ப்பாணத்தை நோக்கி பயணத்தை ஆரம்பித்தார்.

○ 1687 மே மாதம் புயற் காற்றால் அலைக்கழிக்கப்பட்டு யாழ்ப்பாணத்துக்குப் பதிலாக வாஸ் அடிகளும் யோனும் மன்னார் வந்தடைந்தனர்.

**யாழ்ப்பாணத்தில் பணி ஆரம்பம்**

✧ சில நாட்களின் பின் 1687 மே மாத இறுதியில் யாழ்ப்பாணம் வந்தடைந்தனர். வந்த பின் இருவரும் வயிற்றோட்ட நோயினால் பாதிப்படைந்தனர்.

✧ 1687 ஜூன் மாதம் நலமடைந்ததும் கழுத்தில் செபமாலையணிந்து பிச்சையெடுத்துக் கத்தோலிக்கரைக் கண்டுபிடித்தனர்.

✧ 1687 ஜூலை மாதத்தில் தம்மைக் கத்தோலிக்கருக்கு வெளிப்படுத்திய பின் பாதுகாப்பாக சில்லாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு ஏறக்குறைய 2½ வருடங்கள் தங்கியிருந்து அவ்வப்போது யாழ்குடா நாட்டின் மற்றப் பகுதிகளுக்கு இரவு வேளைகளில் வடமராட்சி, கிளாலி, பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி, வலிகாமம் வடக்கு, தீவுப்பகுதி ஆகிய இடங்களுக்குச் சென்று பணியாற்றி வந்தார்.

✧ 1688 டிசம்பர் 24ம் திகதி கிறிஸ்மஸ் நள்ளிரவுத் திருப்பலியின்போது நடந்த சுற்றி வளைப்பில் வாஸ் அடிகள் தப்பி

னாலும் டொன் பேட்றோ. மனுவல் டி சில்வா மற்றும் 6 பேர் பிடிபட்டு சித்திர வதைக்குள்ளாகி மறை சாட்சிகளாயி னர். வாஸ அடிகள் பத்திரமாக வன் னிப்ப குதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு. புத்தளம் சென்றடைந்தார்.

**கண்டியில் மறைப்பணி**

o கண்டி செல்லும் நோக்கில் 1690 ஜன வரியில் புத்தளம் வந்தடைந்து அங்கு மறைப்பணியாற்றினார். கண்டியில் பாதுகாப்பாக இருந்துகொண்டு ஒல் லாந்தர் பிடியிலிருந்த இடங்களான கொழும்பு. நீர்கொழும்பு. மன்னார். யாழ்ப் பாணம். ஆகிய இடங்களில் கத்தோ லிக்கர் செறிந்து வாழ்ந்ததால் அவ்வி டங்களுக்குச் சென்று வரத் திட்டமிட்டார்.

o புத்தளப் பகுதியில் 18 மாதப் பணி முடிவடைந்த நிலையில் 1691 ஆகஸ் டில் கண்டியை நோக்கிச் சென்றார். கண்டியின் நுழைவாயிலில் உள்ள வெயுடா சென்றடைந்து கண்டியரசனது அனுமதி கிடைக்கும் வரை அங்கு பணிபுரிந்தார். அந்தோனியோ சோத் தோமயோர் ஊடாக கண்டியரசனின் உத்தரவு பெற முயற்சியெடுக்கப்பட்ட வேளையில் நன்கிளார் டெலா நெறோல் எனும் கல்வினிசவாதியின் சூழ்ச்சியால் வாஸ் அடிகளும் யோணும் போர்த் துக்கேய ஒற்றர்கள் என்று சந்தேகிக் கப்பட்டு கண்டி மன்னனால் கைது செய்யப்பட்டு கண்டிநகர் கொண்டு செல் லப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர்.

o ஆரம்பத்தில் சிறைவாசம் கடுமையாக இருந்தாலும் வாஸ் அடிகளார் குற்றமற் றவர் என்று விளங்கத் தொடங்கியதும் கட்டுப்பாடுகள் தளர்ந்தன. சிறை வளா கத்திலேயே ஒரு குடிசைக் கோயில் அமைத்து 1691 கிறிஸ்மஸ் தினத்தன்று அங்கு திருப்பலியும் ஒப்புக் கொடுத்தார்.

o 1692ல் இருந்து வரையறைக்குட்பட்ட முறையில் கண்டிநகருக்குள் மட்டும் பணியாற்ற அனுமதி கிடைத்தது.

o 1696ல் நீண்ட கால வரட்சியின் பின் வாஸ் அடிகளின் வேண்டுதலால் புதுமையாக மழை பொழிந்ததால் - கூடுதல் சுதந்திரம் வழங்கப்படல்.

o யோண் கோவாவுக்குத் திரும்புதல்.

**இலங்கை முழுவதிலும் பணி**

◆ 1697 ஜனவரியில் 10 வருடம் தனி யாகப் பணியாற்றிய யோசப்வாஸ் அடிகளுக் குத் துணையாக யோசப் மெனசெஸ். யோசப் கர்வாலோ (வாஸ் அடிகளின் மருமகன்) ஆகியோர் வந்து சேர்ந்தனர். 1696ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என்று கொச்சின் ஆயரால் எழுதப்பட்ட வாஸ் அடிகளாரைக் குருமுதல்வராக நியமிக்கும் கடிதத்தையும் இவர்கள் கொண்டு வந்தனர். ஒரட்டோரியன் சபையைச் சாராத பெட்றோ பெறாவோ என்ற குரு வும் வாஸ் அடிகளுடன் பணியாற்ற வந் திருந்தார்.

◆ இலங்கை மூன்று பணிப்பாகங்க ளாகப் பிரிக்கப்பட்டது. வாஸ் அடிகளின் மருமகன் கண்டியில் நிறுத்தி வைக் கப்பட்டார். பெட்றோ பெறாவோ அடிக ளுக்கு மாதோட்டம். மன்னார். வன்னி. பூநகரி. யாழ்ப்பாணம் ஆகிய வடபகுதி வழங்கப்பட்டது. மெனசெஸ் அடிகள் புத்தளத்தில் இருந்த வண்ணம் நீர் கொழும்பு. கொழும்புப் பகுதிகளுடன் இந்தியாவுடனான தொடர்புகளை மேற் கொள்ளவும் நியமிக்கப்பட்டார். வாஸ் அடி கள் எல்லா இடங்களையும் தரிசித்து வந்தார்.

◆ 1697 செப்டம்பர் முதல் அடுத்த வருடம் வரை கண்டியில் அம்மை நோய் பரவிய போது வாஸ் அடிகளும் கர்வாலோ அடி களும் அரும்பணி ஆற்றினர்.

◆ 1698ன் நடுப்பகுதியில் கண்டியில் அம்மைநோய் தணிதல். அதேவேளை 1697 இறுதியில் புத்தளம். மாதோட்டம் பகுதியில் பரவிய இக்கொள்ளை நோயி னாலும் பேரழிவு ஏற்பட்டது. அதன் போது குருக்களின் அரும்பணி ஆறுத லளித்தது.

◆ 1698 ஏப்ரல் முதல் மார்ச் வரை வாஸ் அடிகள் இலங்கை முழுவதும் பல்வேறு இடங்களுக்குச் சென்று கத்தோலிக்க குடும்பங்களைத் தரிசித்து வந்தார்.

◆ 1699ல் ஏப்ரலில் சூழ்ச்சியாக கர் வாலோ அடிகள் கண்டியிலிருந்து வெளி யேற்றப்பட்டதுடன். ஆலயம் இடிக்கப்பட்டது. - மே மாதம் வாஸ் அடிகள் கண்டிக்கு வந்து அரசனுக்கு உண்மை நிலையை உணர்த்தவே.- மீண்டும் முன்னையதை விட பெரி தான ஆலயம் கட்டப்பட்டு 1699 செப் டெம்பர் 8ம் தேதி அங்கு பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

◆ 1702 ஜூலை 22ல் வாஸ் அடிகளின் மருமகன் கர்வாலோ அடிகள் இளம் (37) வயதில் சுகவீனமுற்று இறந்தார்.

◆ 1703 வாஸ் அடிகளை இலங்கையின் ஆயராக்க திருச்சபையின் ஆட்சிப்பீடம் முயற்சிக்க – வாஸ் அடிகள் தாழ்ச்சியுடன் நிராகரித்தார். கர்வாலோ அடிகளாரது இடத்திற்கு பெட்றோ டி சல்டானோ அடி கள் வருகை தந்தார். சல்டானோ அடி கள் கொண்டு வந்த ஜூபிலி பலன் மன் னார் மாதோட்டத்தில் பிரகடனம். பெரும் எண்ணிக்கையானோர் பாவசங்கீர்த்த னம் செய்து நற்கருணையுட்கொண்டு ஜூபிலி பலன் பெற்றனர்.

◆ 1704 வாஸ் அடிகள் ஒரு விபத்து காரணமாக ஏற்பட்ட முள்ளந்தண்டுவட நோவிலிருந்து 1704 ஏப்ரல் மாதம் குணம் பெற்றார்.

◆ 1705 மே மாதம் யாக்கோமே கொன்சால்வேஸ். யோசப் டே யேசு மரியா. மனுவல் டே மிராண்டா. மிகு வேல் டே மெல்லோ ஆகிய நான்கு குருக்கள் கோவாவிலிருந்து புறப்பட்டு வந்தபோது வாஸ் அடிகள் அவர்களை செப்டம்பர் மாதம் பறப்பாங்கண்டல் பெரியகோயிலில் வரவேற்று எல்லாக் குருக்களுக்கும் பணித்தளங்களைப் பிரித்துக் கொடுத்தார்.

◆ 1706 யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளின் பன்மொழிப்புலமையை நன்கு அறிந்த வாஸ் அடிகள் தமிழிலும் சிங்களத்திலும் அவர் பாண்டித்தியம் பெற ஊக்குவித்ததுடன் பல பல கிறிஸ் தவபக்தி நூல்களை அவர் ஆக்குவதற்கு வழி சமைத்தார். இன்றும் தவக் காலத் தில் தமிழிலும் சிங்களத்திலும் இராகத் துடன் பாடப்படும் பசாம் எனும் வியாகுல பிரசங்கம் அவருடையது.

◆ பாப்பரசர் 11ம் கிளமென்ற் வாஸ் அடிகளின் ஒரட்டோரியன் சபைக்கு நவம் பர் 26ம் திகதி வழங்கிய ஆணையின் படி அங்கீகாரம் வழங்கினார்.

◆ 1707 வாஸ் அடிகள் நோய்வாய்ப்பட் டது - புத்தளத்தில் நடந்த குருக்கள் ஒன்று கூடலிலும் கலந்துகொள்ள முடியாமை - வாஸ் அடிகளாருக்குப் பலவழிகளிலும் பக்கபலமாக இருந்த கண்டியரசன் 2ம் விமலதர்ம சூரியன் ஜூன் 4ம் திகதி இறந்தான்.

◆ 1708ல் மேலும் இக்னேஷியஸ் அல் மெய்டா. பிரசீலியோ பறேற்றோ ஆகிய இரு குருக்கள் வருகையுடன் குருக்கள் எண்ணிக்கை 10 ஆகியது. உடல் நலம் குறைந்து பலவீனமுற்ற நிலையில் தான் ஓய்வு பெற இன்னுமொருவர் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டு மென்று தன் விருப்பத்தை வெளியிட் டார்.

**வாஸ் அடிகளின் இறுதி நாட்கள் - இறப்பு**

o 1710 வாஸ் அடிகள் நோயுற்று. பல வீனமுற்றுப் பேசுவதற்கு முதலாக சிர மப்பட வேண்டியிருந்தது. எனினும் மறைத்தூதுப் பயணமாக கண்டியிலி ருந்து 8 நாள் பயணத்தூரமுள்ள கொட்டி யாரக் குடாப்பகுதிக்கு இரு பணியாளர் களுடன் சென்றிருந்தபோது கடும் காய்ச்சலுடன் அவருக்கு மாரடைப்பும் ஏற்பட்டது. அதிலிருந்து குணமடையாத நிலையில் அவரை ஒரு பல்லக்கில் கண்டிக்குத் தூக்கிச் செல்ல வேண்டியேற்

பட்டது. ஒரு முறை யாக்கோமே கொண்சால்வேஸ் அடிகள் இல்லாத போது ஒரு நோயில்பூசுதலுக்கு அழைப்பு வந்த போது வாஸ் அடிகளை பல்லக்கில் கொண்டு போனபோது பல்லக்குச் சுமந்தவர்களில் ஒருவர் கால் இடறி கீழே விழவே வாஸ் அடிகள் பல்லக்குடன் விழுந்து கடும் காயமுற்றார். அத்துடன் பாயும் படுக்கையுமானார். எனினும் ஏப்ரல் 20 உயிர்ப்பு நாள் காலத்தில் ஓரளவு தேறினார்.

○1711 ஜனவரி 7ம் திகதி வாஸ் அடிகள் குருமுதல்வர் பதவியையும் இங்குள்ள ஒரட்டோரியன் சபைக்குருக்களின் முதல்வர் பொறுப்பையும் யோசப் டி மெனசஸ் அடிகளாரிடம் ஒப்படைத்தார். ஜனவரி 16ம் திகதி தமக்கு நோயில் பூசுதல் வழங்கும்படி வாஸ் அடிகள் கேட்டபோதும் அதற்கு உடனடியாக அவசியமில்லையென யாக்கோமே கொண்சால்வேஸ் அடிகள் எண்ணினாலும் வாஸ் அடிகள் மீண்டும் வற்புறுத்திக் கேட்டமையால் நோயிற்பூசுதல் திருவருட்சாதனத்தை வழங்கினார். பி.ப. 5 மணியளவில் வாஸ் அடிகள் இறைவனடி சேர்ந்தார்.


**இலங்கையின் திருத்தூதர் புனிதராக**

✚1995 ஜனவரி 21ம் திகதி திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் இலங்கை வந்த போது யோசப்வாஸ் அடிகளாரை அருளாளர் நிலைக்கு உயர்த்தினார்.

✚2015 ஜனவரி 14ம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் இலங்கை வரும்போது அருளாளர் யோசப்வாஸ் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுகிறார்.

**அருட்பணி ச.வி.ப. மங்களராஜா,**
விரிவுரையாளர்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

# அருளாளர் யோசப் வாஸ் புனிதர் நிலைக்கு




போர்த்துக்கேய மறைப்பணியாளரால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட கத்தோலிக்கம், இலங்கை ஒல்லாந்தரால் கைப்பற்றப்படும் வரையும் மிக வலுவான நிலையிலிருந்தது. எனினும், ஒல்லாந்தா கத்தோலிக்க மறைக்கு எதிராகக் கடைப்பிடித்த கடும்போக்குக் காரணமாக கத்தோலிக்கம் இலங்கையில் முற்றாக அழியும் நிலையிலிருந்த போது வாஸ் அடிகளின் கடின உழைப்பாலும் புனிதம் நிறைந்த வாழ்வினாலும் காக்கப்பட்டு புத்தூக்கம் பெற்றது. வாஸ் அடிகள் திருச்சபைக்கு ஆற்றிய அளப்பரிய, அப்பணம் நிறைந்த சேவைக்காய் இவர் 21 ஜனவரி 1995இல் திருத்தந்தை 2ஆம் ஜோண் பவுல் அவர்களால் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். மேலும், 14 ஜனவரி 2015 இல் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படவுள்ளார். இவரது வாழ்வும் பணியும் எங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். அவரது வாழ்வில் இடம்பெற்ற சில முக்கிய நிகழ்வுகளையும் அவை எமக்கு முன்வைக்கும் சிந்தனைகளையும் படிப்பினைகளையும் முன்வைக்கின்றோம்.

**யோசப்வாஸ் பிறப்பும், இளமைப் பருவமும்**

யோசப் வாஸ் 21 ஏப்பிரல் 1651இல் கிறிஸ்ரோப்பர் வாஸ், மரிய தெ மிரண்டா என்னும் கொங்கோணி மொழி பேசும், பிராமாணப் பெற்றோருக்கு மூன்றாவது குழந்தையாக கோவாவிலுள்ள பெனோலிம் என்னும் இடத்தில் பிறந்தார். எளிமையான இக்குடும்பம் கத்தோலிக்கப் பாரம்பரியங்களை இறுக்கமாகக் கடைப் பிடித்தமையினால் பிள்ளைகளும் விசுவாசத்தில் உறுதி பெற்றவர்களாக வளர்ந்தனர். தந்தை ஊராகிய சாங்கோலேயில் ஆரம்பப் பாடசாலைக்கல்வியையும், புனித பவுல் கல்லூரியில் இலக்கணக்கல்வியையும் கற்று, தொடர்ந்து டொமினிக்கன் சபையினரால் நடத்தப்பெற்ற புனித தோமஸ் அக்குவைனஸ் உயர்கல்விக்கூடத்தில் மெய்யியல், இறையியல் கற்கை நெறிகளை மேற்கொண்டார். இவர் தமது 20ஆவது வயதில் குருத்துவப்பணிக்குத் தம்மை அர்ப்பணித்து அதற்கான பயிற்சிகளைப் பெற்று 1676 இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 1676 முதல் 1681 வரையிலுமான காலப்பகுதியில் கோவாவில் பணியாற்றும் போதே இலங்கைக் கத்தோலிக்கரின் பரிதாப நிலைபற்றிக் கேள்வியுற்று இலங்கை செல்வதற்குத் தீர்மானித்தார்.

வாஸ் அடிகளின் வாழ்வையும், இலங்கைத் திருச்சபையின் வரலாற்றையும் முற்றாக மாற்றியமைத்த இத்தீர்மானமே வாஸ் அடிகளின் வாழ்வில் பெரும் திருப்புமுனையாக அமைந்தது. இலங்கை சென்று பணியாற்றும் இவரது திட்டத்தை சககுருக்கள் எவரும் ஆதரிக்கவில்லை. இலங்கையில் பணிபுரியக் குருக்களை அனுப்புவதற்கென கோவாவில் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு வாஸ் அடிகள் சென்றார். இலங்கையில் பணியாற்ற வாஸ் அடிகள் முன்வந்தமை கோவா குருக்கள் அவைக்கு மகிழ்ச்சியளித்தாலும், இலங்கைக்கல்ல, மாறாகக் கன்னடத்திற்குச் சென்று பணியாற்றும்படி பணிக்கப்பட்டார். கத்தோலிக்க மறையைப் பொறுத்தவரையில் இலங்கையில் நிலவிய அதே அரசியற்சூழலே கன்னடத்திலும் நிலவியது. வாஸ் அடிகள் தமது ஆன்மகுருவிடம் அறிவுரை கேட்டபோது ஆன்மகுருவும் கன்னடத்திற்குச் சென்று பணியாற்றும்படி அறிவுரை வழங்கினார். கன்னடமும் ஒல்லாந்தக் கிழக்


கிந்தியக் கொம்பனியினரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தாலும், நிர்வாக மையம் கொழும்பிலிருந்தே செயற்பட்டது. இதனால் கன்னடத்திலிருந்து கொழும்பு செல்வதற்கு அதிக வாய்ப்புக் கிடைக்குமென ஆன்மகுரு அறிவுரை வழங்கியிருந்தார். 1681 முதல் 1684 வரையிலுமான காலப்பகுதியில் கன்னடத்தில் பணியாற்றினாலும், இலங்கை நிலவரம் பற்றியும், இலங்கை செல்வது பற்றியும் அறியக் கூடிய விடயங்களை அறிந்து கொள்வதில் வாஸ் அடிகள் கருத்தாயிருந்தார். தம்மை அடிமையாக விற்கும்படி பல தடவைகள் தம் சக குருக்களிடம் கோரிய போதும் அவரது இக்கோரிக்கை சக குருக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்டது.

**ஓரற்றோறியன் சபையின் தோற்றம் இறை பராமரிப்பின் வழிநடத்தலே**

இந்தியாவில் குறிப்பாகக் கோவாவில் பணியாற்றிய துறவற சபைகளில் ஐரோப்பியக் குருக்கள் மட்டுமே அங்கத்தினராக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். சுதேச குருக்கள் விரும்பினாலும் இதில் இணைவதற்கு அனுமதிக்கப்படவில்லை. இதனால் பாஸ்கல் தெ கொஸ் ரா ஜெரேமியா என்னும் மறைமாவட்டக்குரு சுதேச குருக்கள் குழுமமாக வாழ்வதற்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தார். ஆரம்பத்தில் மூவர் இதில் இணைந்த போதும், இம்முயற்சி வெற்றி அளிக்கவில்லை. எனினும், யோசப் வாஸ் அடிகள் இலங்கை செல்வதற்கு இறுதி முடிவை மேற்கொண்டிருந்தபோதும் இக்குழுவில் இணைந்து தலைமைப் பொறுப்பேற்று இதற்குப் புத்துயிர் அளித்து, புனித பிலிப்பு நேரியாரின் ஒரற்றறியாக இதனை நிறுவினார். இவரைத் தொடர்ந்து குருக்கள் பலர் இதில் இணைந்ததால் இக்குழுமம் புதுப்பொலிவும், புத்தாக்கமும் பெற்றது. 1687 முதல் 1835 வரையும் இந்த குழுமத்தின் வரலாற்றை நோக்கும்போது, இது இலங்கையில் கத்தோலிக்க விசுவாசத்தைக் காக்க இறைவனால் ஏற்படுத்தப்பட்டதாகவே தென்படுகிறது. இலங்கையில் கத்தோலிக் கம் காக்கப்பட்டமைக்கு இந்த ஒரற்ரேறறிக் குழுமத்தினர் பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர் என்பது மறுக்க முடியாத வரலாற்று உண்மையாகும். 1687 முதல் 1835 வரை அண்ணளவாக 150 ஆண்டுகள் ஒரற்றோறியன் சபை இலங்கைத் திருச்சபைக்கு குருக்களைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டேயிருந்தது.

**மறைத்தூதுப் பயணங்கள்**

மக்களை அவர்கள்தம் கிராமங்களிலும் இல்லங்களிலும் சந்தித்து ஊக்கப்படுத்துவது மிகச்சிறந்த மறை அறிவிப்பு முறையாகும். இவ்வகையில், நற்செய்திப்பணியாற்றும் அனைவருக்கும் மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர் யோசப்வாஸ் அடிகள். ஒல்லாந்தர் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மக்களைச் சந்திப்பதில் பல ஆபத்துக்களையும், சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இப்பகுதிகளில் மாறுவேடத்தில், இரவு வேளைகளில் மட்டும் மக்களைத் சந்திக்க முடிந்தது. ஒல்லாந்த இராணுவத்தினரின் கடும் கண்காணிப்பின் மத்தியிலும் இவரது இல்லத்தரிசிப்புக்கள் இடம்பெற்றன. இவ்வாறு இவர் மேற்கொண்ட பயணங்களின்போது காடுகள், முதலைகள் நிறைந்த ஆறுகள், கரடுமுரடான பாதைகள் முதலான வற்றை வெறும் காலுடன் நடந்தே கடந்தார். ஆபத்தான விலங்குகள் நிறைந்த காட்டுப்பாதைளை நடந்து கடந்ததுடன் காடுகளிலேயே இரவையும் கழித்ததுண்டு. உடன் பயணித்த ஏனையோர் தூங்கும்போது இவர் விழித்திருந்து சாமக்காவலை மேற்கொள்வதுண்டு.




வாஸ் அடிகளால் உடன் பணியாளருக்கான ஊக்கப்படுத்தலும் வழிகாட்டலும் வழங்கியமை பற்றிக்கூறும் ஆவணக் குறிப்புக்கள் அதிகம் உள்ளன. 9 செப்ரெம்பர் 1700இல் வாஸ் அடிகள் உடன் பணியாளருடன் முதல் ஆலோனைக் கூட்டத்தை நடத்தினார். இதில் இலங்கை முழுவதும் எட்டுப் பணித்தளங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக் கும் ஒரு குரு பொறுப்பாக நியமிக்கப் பெற்றார். ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு குருவை பொறுப்பாக நியமித்தார். வாஸ் அடிகள் தாம் கண்டியில் தங்கியிருந்து, ஒவ்வொரு குருவையும் அவர் தம் பணித்தளத்தையும் தரிசித்து குருக்களையும் மக்களையும் ஊக்குவித்து தேவைக்கேற்ப உதவி வழங்கி வந்தார். அதன்படி வாஸ் அடிகள் கண்டி நகரை மையமாகக் கொண்டு அங்கிருந்து நாடு முழுவதும் பத்துக்கும் அதிகமான மறைத்தூதுப்பயணங்களை மேற்கொண்டார். இப்பயணங்கள் பற்றிப் பேணியோலா அடிகள் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

கண்டியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இரண்டு தடவைகளும், கொழும்பு, நீர்கொழும்பிற்கு மூன்று தடவைகளும், மட்டக்களப்பிற்கு ஆறு தடவைகளும், திருகோணமலைக்கு ஆறு தடவைகளும், புத்தளத்திற்கு எட்டுத் தடவைகளும், மாதோட்டத்திற்கு நான்கு தடவைகளும் மறைஅறிவிப்புப் பயணங்களை மேற்கொண்டார். இப்பயணங்கள் அனைத்தும் பாத அணிகள் அற்ற நிலையில், கால்நடையாக மேற்கொண்ட பயணங்களாகும். பல பிரச்சினைகளும் சிக்கல்களும் நிறைந்த சூழலில் வாஸ் அடிகள் பல்வேறு பணிகளில் மிகக்கடினமான பணியைத் தெரிந்து கொண்டார். சிறந்த மறை அறிவிப்பு முறையாகக் கொள்ளப்படுகின்ற இல்லத்தரிசிப்பு, பங்குத்தரிசிப்பு என்பவற்றின் உச்சப்பயன்பாட்டை இவை சுட்டி நிற்கின்றன. அந்தந்த இடங்களிலுள்ள கிராமங்களைத் தரிசித்தமையும், மக்களைச் சந்தித்து ஊக்கப்படுத்தியமையும், ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியினரின் கடும் கண்காணிப்பின் மத்தியில் இடம்பெற்றவையாகும். மக்களுடன் நெருங்கிப் பழகுவதன் மூலமே மக்களின் பிரச்சினைகளை அறிந்து, விசுவாச வாழ்வில் ஊக்கப்படுத்த முடியும் என்பதை யோசப் வாஸ் நன்கு அறிந்திருந்தார். "என் ஆடுகள் எனது குரலுக்குச் செவி சாய்க்கின்றன. எனக்கும் அவற்றைத் தெரியும். அவையும் என்னைப் பின் தொடர்கின்றன." (யோவா 10/11) இவை யேசுபெருமானின் வார்த்தைகள். மக்களுடன் நெருங்கிய உறவை எற்படுத்துவதன் மூலமே அவர்களையும் அவர்கள் தேவைகளையும் அறிய முடியும். குருக்கள் தம் பணியில் மக்களைத் தரிசிப்பதும் ஆயர்கள் பங்குகளைத் தரிசிப்பதும் மிக முக்கியமான இறை அறிவிப்புப்பணியாகும்.

**தொகையிலும் மேலாக தரத்திற்கு முதலிடம் அளித்தவர்**

கடும் எச்சரிக்கைகள், ஆபத்துக்கள் மத்தியில் பணியாற்றிய போதும் தாமாகவே மதம்மாற முன்வந்தோரையும்



மிக நிதானத்துடனேயே ஏற்றுக் கொண்டார். மதம் மாற விரும்பியோரின் நோக்கம் தவறானது எனக் கண்டபோது அவர்களுக்கு திருமுழுக்கு அளிக்க மறுத்தார். 1703ம் ஆண்டு அறிக்கையின்படி "கண்டி அரசையும், கடலோரப் பகுதியையும் சார்ந்த எண்பது பேர் இவ்வருடம் கத்தோலிக்க மறையைத் தழுவ முன்வந்தனர். எனினும் யோசப் வாஸ் அடிகள் இவர்களுக்குத் திருமுழுக்கு வழுங்கத் தயங்கினார். இவர்களின் உண்மை நோக்கினையும் தூண்டுதலுக்கான காரளணங்களையும் அறிந்த பின்பே திருமுழுக்களிக்கலாம் என முடிவு செய்தார்".

**இலக்கிய ஆக்கமும் - மறை அறிவு வழங்கலும்**

தமிழிலும் சிங்களத்திலும் கிறிஸ்தவ இலக்கியங்களை ஆக்க வேண்டுமென வாஸ் அடிகள் நீண்ட நாட்களாகக் கொண்டிருந்த திட்டத்தை நிறைவேற்றக் கூடியவர் கொன்சால்வெஸ் அடிகளே என்பதை அறிந்து அவருக்கு அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார். கொன்சால்வெஸ் அடிகள் இரண்டு மொழிகளையும் கற்று சிங்கள மொழியில் 22 நூல்களையும் தமிழில் 15 நூல்களையும் எழுதினார். இந்நூல்கள் அடிப்படைச் செபங்கள், ஒழுங்கு விதிகள், விவிலிய மொழிபெயர்ப்பு, விவிலிய வினாவிடை, திருவருட்சாதனங்கள், கோட்பாடுகளுக்கான விளக்கம், கிறிஸ்துவின் பாடுகள் மரணம் பற்றிய விளக்கம், புனிதர்கள் வரலாறு, மரியன்னையின் புதுமைகள் எனப் பல விடயங்களை உள்ளடக்கியவையாகக் காணப்பட்டன. மேலும், கொன்சால்வெஸ் அடிகள் 'கம்மல' என்னுமிடத்தில் 12 இற்கும் அதிகமான படியெடுப்போர் துணை கொண்டு ஒவ்வொரு நூலிலும் 200 - 300 பிரதிகள் படி எடுத்ததாக வரலாறு கூறுகின்றது.

இந்நூல்கள் மறைஆசிரியர்கள் அதாவது அண்ணாவி, உபதேசி என்போருக்குப் பெரும் பயனுள்ள நூல்களாக விளங்கியிருக்கும் என்பதில் சந்தேகமிருக்க முடியாது. மேலும், வளர்ந்தோருக்கான மறை அறிவை அளிப்பதற்கும் சிறந்த கற்பித்தல் ஊடகமாக விளங்கியிருக்கும் என்பதில் சந்தேகமிருக்க முடியாது. மேலும், மக்களுக்கு மறை பற்றிய ஆழமான, பரந்த அறிவை அளிப்பது முக்கியமானது என்பதையும் இலக்கியங்கள் மறைஅறிவிப்பில் பெரும் பங்காற்ற முடியும் என்னும் கருத்தினையும் இலக்கியங்களின் ஆக்கம் எடுத்துரைக்கின்றது. யோசப் வாஸ், கொன்சால்வெஸ் அடிகளுக்கு கிடைக்காத அச்சியந்திர யுகத்தில் நாம் உள்ளதும் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

**மதமாற்றமும் - பொருளுதவியும்**


யோசப்வாஸ் அடிகள், பிறசமயத்தவர் கிறிஸ்து மறைக்கு மதம்மாறுவதை ஏற்றுக்கொண்ட போதும், இவர்களுக்கு எந்தவித சலுகைகளோ கொடைகளோ வழங்கி மதம்மாற்றம் செய்யவில்லை. அவர் மேற்கொண்ட மதமாற்றச் செயற்பாடுகளுக்குச் சாதகமாய் அமைந்தது அவரது எடுத்துக்காட்டான வாழ்வும், அவர் மதபேதமின்றி மேற்கொண்ட மனிதநேயப் பணிகளுமேயாகும். கண்டியில் அம்மைநோய் பரவி பல உயிர்களைக் காவு கொண்டபோது, எவரது உதவியுமின்றி தவிக்க விட்டுச் சென்ற பல நோயாளரைப் பராமரித்தார். எனினும் அவர் நோய்த் தொற்றிலிருந்து காக்கப்பட்டமை பெரும் புதுமையாகவே கிறஸ்தவர்க்கும், கிறிஸ்தவரல்லாதோர்க்கும் தென்பட்டது. வாஸ் அடிகளின் புனித வாழ்வும், மனித நேயப் பணிகளுமே பலரின் மதமாற்றத்திற்குக் காரணங்களாயமைந்தன. இரண்டாம் வத்திக்கான் சங்கம் பிற மதங்கள் மட்டில் கொண்டுள்ள பரந்த நல்லெண்ண மனப்பாங்கை வாஸ் அடிகள் 280 ஆண்டுகளுக்கு முன்பே தம் செயற்பாடுகளால் வெளிப்படுத்தியுள்ளார்.

**சில்லாலையில் ஆபத்து - எனினும் அது ஒரு ஆசீரே**

1687 யூலை முதல் சில்லாலையில் தங்கியிருந்து பல ஆபத்துக்கள் மத்தியிலும் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் 1689 இல் கிறிஸ்து பிறப்பு விழாத் தினத்தன்று கைதுசெய்யப்படும் ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள வாஸ் அடிகள் அவசர, அவசரமாகச் சில்லாலையிலிருந்து வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. யாழ்ப்பாணத் திருச்சபைக்கு இதுபெரும் பின்னடைவான போதும், இந்நிகழ்ச்சி இலங்கைத் திருச்சபையின் பெருவளர்ச்சிக்குக் காரணமாய் அமைந்தது. மேலும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறிய வாஸ் அடிகள் புத்தளம் சென்று அங்கிருந்து கண்டி செல்வதற்கும், பாதுகாப்பாக கண்டியரசிலிருந்து இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குச் சென்று மறைபரப்புப் பணியை மேற்கொள்ளவும் சில்லாலையிலிருந்து வெளியேறிய நிகழ்வு வழிகோலியது.

1692இல் வாஸ் அடிகள் கண்டிக்குச் சென்றார். எனினும் கண்டிக்குச் செல்வதற்கு முன்பு கோவாவிலுள்ள தமது சபைத்தலைவருக்குக் கடிதம் அனுப்பி, தாம் தொடர்ந்து இலங்கையில் பணியாற்றுவதா? அல்லது கோவாவிற்குத் திரும்ப வேண்டுமா? இலங்கையில் பணியாற்ற வேறொருவரை நியமிக்கும் திட்டமுண்டா? எனக் கேட்டிருந்தார். ஆச்சரியமாக, சபைத்தலைவர் வாஸ் அடிகளைக் கோவா திரும்பும்படி பதில் எழுதியிருந்தார். இக்கடிதம் வாஸ் அடிகளை மிகவும் இக்கட்டான நிலைக்குத்தள்ளியது. சபைத் தலைவரின் பணிப்பை இறைவனின் சித்தம் எனக் கருதி வாஸ் அடிகள் கோவா செல்ல விரும்பினாலும் சிறைப்பட்டிருந்த காரணத்தினால் செல்ல முடியவில்லை. எனினும் சபைத்தலைவருக்கு 27 ஒக்டோபர் 1693இல் பதில் எழுதினார். இதில் "நான் இங்கு சிறைப்படுத்தப்பட்டுள்ளேன். நான் சிறையிலிருந்து தப்பித்து கோவா திரும்பினால், இச்சூழலில் இங்குள்ள கத்தோலிக்கரின் நிலை என்னவாகும்" எனக் கேட்டிருந்தார். கண்டி மன்னன் விமல தர்ம சூரியன் வாஸ் அடிகளைச் சிறைப்படுத்தியது. இலங்கைத் திருச்சபைக்கு கிடைத்த

மறைமுகமான ஆசீரே. சிறைப்படுத்தப்படாதவிடத்து சபைமுதல்வர் பணிப்பை ஏற்று சென்றிருப்பார். வாஸ் அடிகள் கோவா சென்றிருந்தால் இலங்கைத் திருச்சபையின் நிலை எப்படிப்பட்டதாக இருந்திருக்குமென எண்ணிப் பார்க்கவே முடியாது.



**இறை பராமரிப்பில் ஆழமான நம்பிக்கை**

இலங்கைத் திருச்சபையை வழிநடத்தும் பொறுப்பை வாஸ் அடிகள் மேற்கொண்ட போதும் முக்கிய தீர்மானங்கள் எடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டபோதும் தம்முடனுள்ள மற்றைய குருக்களிடம் கலந்தாலோசித்து தீர்மானம் எடுப்பதுண்டு. குருக்கள் இல்லாதவிடத்து பொறுப்புள்ள பொதுநிலையினருடன் கலந்தாலோசித்தார் என்பது அவருடன் வாழ்ந்த குருக்களின் சான்றாகும்.

**பொது நிலையினர் பங்களிப்பு**

வாஸ் அடிகள் 1687 முதல் தனியொருவராகவே இலங்கையில் பணியாற்றினார். வாஸ் அடிகள் சிக்கலான சூழ்நிலையில் வெற்றிகரமாகப் பணியாற்றியமைக்கு பொதுநிலையினர் வழங்கிய ஒத்துழைப்பு முக்கிய காரணிகளிலொன்றாயமைகிறது.

**கிறிஸ்தவ குழுமங்களை உருவாக்குவதில் மூப்பர், அண்ணாவி ஆகியோர் பங்களிப்பு**

வாஸ் அடிகளும், ஏனைய ஒரற்ரோறியன் சபைக் குருமாரும் மிகக் குறைந்த எண்ணிக்கையினராய் இருந்தபோதும் சிறந்த முறையில் கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கியுள்ளனர். மக்களிடமிருந்து தெரிவுசெய்யப்பட்ட மூப்பர், அண்ணாவி (உபதேசியார்) என்போரின் உதவியுடன் இக்கிறிஸ்தவ சமூகங்கள் உருவாக்கப்பட்டன. சமூக அந்தஸ்து பெற்றவர்களும் மறையில் ஆழமான பற்றுள்ளவர்களுமே இப்பணிக்கு நியமனம் பெற்றனர்.

மூப்பர் என்பவர் சமூகத்தின் (மூத்தவர்) தலைவராகவும், வழிநடத்துனராகவும், பிணக்குகளின் போது நடுநிலையாளராகவும் செயற்பட்டார். அண்ணாவி (உபதேசியார்) என்பவர் வழிபாடுகளின்போது குறிப்பாக ஞாயிறு தினங்களில் வழிபாட்டை ஒழுங்கு செய்தல், நோயாளருக்காகச் செபித்தல், இறந்தோரின் அடக்கச் சடங்கை நடத்துதல், மறைக்கல்விப் பாடங்களைக் கற்பித்தல், ஆலயங்கள் (கொட்டில் ஆலயங்கள்) உள்ள இடங்களில் அவற்றின் கண்காணிப்பாளராகப் பணியாற்றல் முதலான கருமங்களை ஆற்றி வந்தார்.

யோசப் வாஸ் அடிகளும் ஏனைய ஒரற்ரோறியன் சபைக் குருமாரும் தங்கள் பணிகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தவும் படிப்படியாக கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கவும் மூப்பர், அண்ணாவி என்பவர்களின் பணிகள் பெரும் உதவியாயமைந்தன. மக்களும் இவர்களைத் தம் தலைவர்களாக ஏற்று ஒத்துழைப்பு வழங்கி, மதிப்பளித்தனர். இவர்கள் குருக்களாலும், மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவர்கள் என்பது முக்கியவிடயமாகும். இந்த நடைமுறை போர்த்துக்கேயர் காலத்திலிருந்தே வழக்கிலிருந்துள்ளது. வாஸ் அடிகள் சில்லாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு மூப்பரின் கண்காணிப்பில் விடப்பட்டமை இதனை எடுத்துக் காட்டுகின்றது.

மேலும் வாஸ் அடிகள் சில்லாலையில் தங்கிப் பணியாற்றிய போது அவரது பாதுகாப்பு, அண்டைய கிராமங்களுக்கு அவரது பணியை ஒழுங்கு செய்வது, தேவைகளைக் கவனிப்பது ஆகிய பொறுப்புக்கள் மூப்பரிடம் ஒப்படைக்கப்பட்டன. வாஸ் அடிகளும் மூப்பரின் அறிவுரையின்படி நடந்து கொண்டார். சில்லாலையைப் போன்று ஏனைய இடங்களிலும் இதே நடைமுறையே வழக்கிலிருந்திருக்குமெனக் கொள்ளலாம்.

குருக்கள் பொதுநிலையினருடன் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்வதன் முக்கியத்துவத்தையும் பொதுநிலையினரும் ஆக்கபூர்வமான முறையில் பொறுப்புக்களை ஏற்பதுடன், குருக்களின் பணிகளில் பங்குகொள்ள வேண்டியதன் தேவையையும் இது எடுத்துக் காட்டுகின்றது.

**மக்கள் புகலிடம் அளித்தல்**

வாஸ் அடிகளும், ஏனைய குருக்களும் மறைத்தூதுப் பயணங்களை மேற்கொண்டபோது ஒல்லாந்த அதிகாரிகளின் பல எச்சரிக்கைகள், உயிர் ஆபத்துக்கள் தண்டனைகள் என்பனவற்றிற்கு மத்தியில் அந்தந்த இடங்களில் வாழ்ந்த மக்களே தங்கள் குடிசைகளில் இவர்களை ஏற்று, புகலிடம் வழங்கி, கண்காணித்துள்ளனர். ஒல்லாந்த அதிகாரிகளின் எச்சரிக்கைகள் மத்தியிலும் மக்கள் வழிபாடுகளில் பங்கு கொண்டு கத்தோலிக்கர்களாக வாழ்ந்தனர்.

**யோண் வழங்கிய ஆறுதல் பணி**

பயணத் துணைவராக மட்டுமன்றி இறுதி வரையும் வாஸ் அடிகளுக்கு எல்லா வேளைகளிலும் உதவி வழங்கியதோடு, அடிகளார் கடும் நோயுற்ற வேளையிலும் உடனிருந்து பராமரித்தவர் பிரமாணிக்கமுள்ள ஊழியன் யோண். இவர் வழங்கிய உதவி காலத்தால் என்றும் மறக்கப்பட முடியாதது. இவருக்கும் வாஸ் அடிகளுக்குமிடையே நிலவிய உறவை எஸ்.ஜி.பெரேரா அடிகள் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றார். "அவரது பிரமாணிக்கமான பணியாளன் யோணை அவர் தனது சொந்தச் சகோதரன் போல நடத்தி வந்தார். கோவாவிற்கு எழுதும் மடல்களில் எல்லாம் அவரைப் பற்றி விசாரித்து எழுதுவார். தனது சகோதரன் யோண் வாஸ் என்றே அவனை அழைப்பார். ஏனென்றால் அவர் அவனுக்குத் தனது குடும்பப் பெயரையே அளித்திருந்தார்". இவ்வாறாக பொது நிலையினரின் பங்களிப்பு வாஸ் அடிகளின் பணி சிறக்க உதவியுள்ளது.

**பணிக்குக் களங்கம் - பதவி ஏற்க மறுப்பு**

வாஸ் அடிகளின் இலங்கைக்கான வருகையின் 200ஆவது வருட நிறைவை முன்னிட்டு இலங்கை அரசினால் முத்திரை வெளியிடப்பட்டது. இம்முத்திரையில் இடம்பெற்ற ஓவியத்தில் வாஸ்

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்) >>



# அருளாளர் யோசேவாஸ்! அவர்கள்

அன்புதிரும் செங்கரமே ஆரமுதே! அருள்வளமே!
உம் பெயருக் கிசைந்த பெருங்கீர்த்தி பெற்றீர்
பொன்பூத்த நின்முகத்தை நோக்கும் போது
பொங்கிவரும் இன்பநிலை கருணை வீசும்
மன்பதைக்கு வழிகாட்ட வந்தஞான யோசேவாஸ்!
மன்றாடும் பாடலுடன் பண்ணிசைத்து எந்நாளும்
நின்பாதம் பூசித்தே எந்நாளும் துதிபாடி
நின்றிருக்கும் அடியோர்கள் இறைபதிக்கு வந்திணைய

எத்திசையும் எழிலெறிக்கும் எம்மறையின் திருவிளக்கே!
முத்திக்கு வழிகாட்ட முன்வந்த முத்தொளியே!
சப்திக்கும் சங்கொலியே! சன்மார்க்க தலநெறியே!
சித்திதரும் நற்பணியில் சீர்த்த சற்குருவே!
வித்தகரே எங்கள் வேதநெறிக் காவலரே!
வெற்றிப் புன்னகையே! வீரித்த செயலுருவே!
பத்திநெறிப் பிரவாகம்! பாய்ந்தோடும் யோசேவாஸ்!
பரிதவிப்பீபோர் பிரலாபம். தீர்க்க வழிதருவீரே!

**ஞா.அரியமலர்**
மிருசுவில்

# புனிதரே

போற்றுதற்குரிய முனீந்திரர் யோசப் வாஸ் அவர்கள்
புனிதராகிவுள்ள. தங்கள் திருவடிகளை
பணிந்து வணங்குகின்றேன்.
இந்தப் பாவியையும்
எம் தமிழ் இனத்தையும்
இலங்கை மக்களையும்
எப்போதும் தாங்கள் வாழ்த்த வேண்டுமென
பிரார்த்தித்து நிறிகின்றேன்.
உங்கள் பாதம்பட்ட எமது மண்
பலகறைகளை
அன்றும் சுமந்தது
இன்றும் சுமக்கிறது
மனதிலிருந்து பிறந்த தங்கள் நிறைமொழிகள்
மந்திரமாய்
பல நூற்றாண்டுகள் கடந்தும்
எங்கள் செவிகளில் ஒலிக்கிறது.
தங்கள் தன்னலமற்ற தியாக சேவையால்
அன்று இலங்கை மண்
இங்கிதமாகியது
தங்கள் ஆன்மீகப் பணியில்
கொழும்புத்துறை கொழுந்து விட்டெரிந்தது.
சில்லாலை சிலிர்த்துக் கொண்டது.
யாழ்ப்பாணம் யாழிசை மீட்டியது.
இயேசுநாதர் சொன்ன "பணியாற்றவே
வந்தேன்" என்பதைப் புனிதரே!
உங்கள் திருக்கோலத்தில் தான்
முன்னோரும் தரிசித்தனர்
நாமும் தரிசிக்கின்றோம்.
உங்கள் உள்ளம் உண்மையானது.
வாக்கு இனிமையாது.
செயல் தூய்மையானது
சொந்த நாட்டிலிருந்த சுகங்கள் அனைத்தையும்
துறந்து விட்டு
நீங்கள் இலங்கை வந்ததும்
ஏழைகளின் இதயம் புகுந்து
அரும்பணிகள் ஆற்றியதும்
மெல்ல மெல்ல வெளிப்பட,
தங்கள் தொண்டின் தூய்மை
உலகத்தின் செவியில்
ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது.
உங்களின் மறைவிற்குபின்
உங்கள் மூலம்
பரமபிதாவிடம் ஏறெடுத்த வேண்டுதல்களுக்கு
பரலோகத்திலிருந்து பதில் வந்தது.
புனிதர் பட்டம்
தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டது.
இனிமேல்
உங்களை உச்சரிக்காமல்
இந்த உலகம் உறங்கப் போவதில்லை.
உங்களுக்கு புனிதர் பட்டமென்று

# ரே வருக ! விடிவு தருக !

ாகட்டு!



இலங்கைமாதா
தலை நிமிர்ந்து நிற்கிறாள்.
ஆரவாரங்களுக்கு அளவில்லை.
நீங்கள் புனிதராவதையும்
திருத்தந்தை வருவதையும்
பறைசாற்ற
மூலைமுடுக்கெல்லாம் பதாதைகள் பளிச்சிடுகின்றன.
காலிமுகத்திடல் செல்லவும்
மடுத்தேவாலயம் செல்லவும்
இப்பொழுதே பயணப்பெட்டிகள் அடுக்கி விட்டோம்.
அறைகள் வாடகைக்கு எடுத்து விட்டோம்
பேருந்து தொடரூந்து, சிற்றூர்ந்து, மகிழுந்து
எல்லாம் வரிசையில் நிற்கின்றன.
புனிதர் பட்டத்தை வேறொருவர் பறித்து விடாமல்
பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.
நீயும் வாறியா? நீயும் வாறியா? எனக் குரல்கள் கேட்கின்றன
கிறிஸ்மஸ்சுக்கும் வருசத்துக்குமென
இதுவரை புத்தாடைகள் வாங்கிய எம்மக்கள்
இம்முறை கொழும்புக்கும் மடுவுக்கும் என "டிசைன்"
ஆடைகள் தேடி அலைகின்றனர்.
தடல்புடலாகத் திருவிழா நடக்கிறது.
ஆனாலும் எம் தேசத்தின் நிலை நீர் அறிவீரோ?
யானை புகுந்த புலம்போல்
தேவையற்ற பலப் பரீட்சைகளாலே
பாழாய்ப் போய்க் கிடக்கிறது எம்தேசம்
தற்போது நான்கு பக்கம் கடலும்
எட்டுப் பக்கம் கடனும்
சூழ்ந்த நிலையில் நாடு அசைகிறது.
கல் தோன்றி மண் தோன்றா காலத்தே
முன்தோன்றிய நம் தமிழினம்
கேட்பார் இன்றி கீழ்மைப்படுத்தப்படுகிறது.
உலகில் ஏழு அதிசயங்கள் இருக்கின்றனவாம்.
எட்டாவது அதிசயமாய்
இலங்கையில் தமிழர் என்ற பெயரில் நாம் இருக்கிறோம்
புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகி
பாம்பாய்ப் பறவையாய் பல அவதாரம் எடுத்துள்ளோம்
சமூகச் சீரழிவுகள் எம்மைச் சல்லடைபோட்டும்
சலிக்காது தொடர்கிறது எங்கள் இருப்பு
காப்பெற் வீதிகளும்
கணகவா மாடங்களும்
புகையிரதத்தின் வருகையும்
வடக்கின் வசந்தமும்
சேடமிழுத்த எங்களை
எழுந்து குந்த வைத்துள்ளது.
ஆனாலும் குனிந்தபடிதான் குந்தியிருக்கிறோம்.
இந்நிலையில்
நீர் புனிதராவதும்
திருத்தந்தை வருவதும்
எம் இனத்திற்கு புதுத்தென்பை அளித்துள்ளது.
உமக்குப் பின்னர் எங்கள் மண்ணில்
புனிதப் பணிகள் செய்தவரை
விரல் மடித்து எண்ணி விடலாம்.
சமூக அரசியல் பணி செய்வதாக
நடித்தவர்களாலும் நடிப்பவர்களாலும்
எமது மண் மட்டுமல்ல
எமது மனங்களும் கறைபடிந்து போயிற்று.
இப்போ நாட்டின் தலைமைத்துவத்திற்கான
போட்டியும் ஆரம்பமாகிவிட்டது.
புனிதர்கள் வாழ்ந்த நாடுகள்
புனித நாடுகளாக
உலக வரைபடத்தில் உருக்கொண்டுள்ளன.
எம் தேசமும் அவ்வாறு உருப்பெற
எம் மக்கள் மனங்கள்
பௌர்ணமி நிலவென களங்கமற்று ஒளிர
புனிதராகும் நீர் புதுமை செய்திட வேண்டும்.
"ஒருவர் தன் வாழ்நாள் காலங்களில்
நிறைவேற்ற முயற்சிக்காத ஒன்றை
தன் மரணத் தறுவாயில் நிறைவேற்ற முடியாது"
எனக் கூறிய உமது அமுதவாக்கு
ஒவ்வொருவர் மனங்களிலும் ஒலித்திடவும்
அது செயல்வடிவம் பெறவும்
ஆசித்தருள வேண்டுமென
உம்மை வேண்டுகின்றோம்
நல்ல கள்வனுக்கு வான்வீடு கிடைத்தது போல்
எமது கனவுகள் மெய்ப்பட வேண்டும்.
வேண்டிய பொருள் கைப்பட வேண்டும்.
இலங்கைத் திருநாடு புனிதநாடாக மலர
புனிதரே உம்மிடம் கையேந்துகின்றோம்.
முடியாவிட்டால் மீண்டும் நீர்
கால்பதித்து எம் மண்ணில் வருக!
விடிவு தருக! வணக்கம்!

**இ.இ.வசிகரன்**
ஆசிரியர்
புனித பத்திரிசியார் கல்லூரி

அடிகளின் அருகே ஆயருக்குரிய செங்கோலும், ஆயர்கள் அணியும் முடியும் காணப்படுகின்றன. இந்த ஓவியம் சுட்டும் பொருள் என்ன?

1703 நவம்பர் பாண்டிச்சேரியை அடைந்த பேராயர் சாள்ஸ் தெ ரூணன், வாஸ் அடிகளிடமிருந்து, அவரதும், ஒரற்றோறியன் சபையினதும் பணிகள் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும்படி கோரியதுடன், வாஸ் அடிகளை இலங்கைக்கு ஆயராக நியமனம் செய்வதற்கும், அவர் விரும்பாத நிலையில் அவரால் முன்மொழியப்படும் வேறொரு குருவை நியமனம் செய்வதெனவும், இது பற்றி வாஸ் அடிகளின் கருத்தைத் தெரிவிக்கும்படியும் கோரியிருந்தார். பேராயரின் மடலுக்கான பதிலை வாஸ் அடிகள் 26 யூலை 1706 இல் அனுப்பியிருந்தார். இதில் இலங்கை மிசன் பற்றிய தகவல்களை வழங்கிய போதும் ஆயர் நியமனம் பற்றிய விடயம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இவ்வாறு இது பற்றிய கருத்துத் தெரிவிக்காமைக்கு வலுவான காரணங்களுண்டு

1.தாழ்ச்சியை அதிகம் விரும்பிய வாஸ் அடிகள் ஆயர் பதவியுடன் இணைந்த புகழையோ, கௌரவத்தையோ விரும்பவில்லை.

2.வாஸ் அடிகள் ஏன் வேறொரு குருவின் பெயரை முன் மொழியவில்லை. ஏனெனில் இலங்கையில் பத்துருவாதோ - விசுவாசப் பரம்புதல் சபை முரண்பாடுகள் தோன்றி இலங்கைத் திருச்சபைக்குப் பெரும் பின்னடைவை ஏற்பட்டிருக்குமென மதி நுட்பத்துடனும் முன்னோக்குடனும் சிந்தித்துக் கருத்துக் கூறுவதை தவிர்த்திருந்தார். 1681 - 1684 வரையிலுமான காலப்பகுதியில் கன்னடத்தில் பணியாற்றிய போது இவ்வுண்மையை நன்கு அறிந்திருந்தார். இதனை, பத்துரு வாதோ - விசுவாசப் பரம்புதல் சபை முரண்பாடுகளின் பின்னணியிலேயே விளங்கிக் கொள்ளலாம்.

**சிங்கள பௌத்த மன்னர்களின் ஆதரவு**

சிங்கள, பௌத்த மன்னர்களான விமலதர்மசூரியன் (1687 - 1706), ஸ்ரீ நரேந்திர சிங்க (1739 - 1747) ஆகிய இருவரும் வழங்கிய தொடர்ச்சியான ஆதரவு, மற்றும் உதவிகள், 1692 - 1746 வரையிலுமான காலப்பகுதியில் கண்டி அரசு வழங்கிய புகலிடம் என்பன வாஸ் அடிகளுக்கும், ஏனைய ஒரற்றோறியன் குழுமக் குருமாருக்கும் பெரும் உதவியாகயமைந்தன. 1697 - 1698 காலப்பகுதியில் அம்மை நோய் வேகமாகப் பரவிப்பல உயிர்களையும் காவுகொண்ட வேளையில் யோசவ் வாஸ் அடிகளும் அவரது மருமகன் கர்வாலோ அடிகளும் ஆபத்தான வியாதி என்பதை நன்கு அறிந்தும் நோயாளருக்கு உதவியமை மன்னனுக்கும் மக்களுக்கும் ஆச்சரியத்தைத் தந்தது. குருக்களின் பிறரன்புச் சேவை மனித அறிவினால் புரிந்து கொள்ள முடியாத தியாகமாயமைந்தது. கண்டியில் கடும் வரட்சியின் போது இடம்பெற்ற ஆச்சரியமான மழை பற்றியும் ஆவணங்கள் குறிப்பிடுகின்றன.

**கிறிஸ்தவமல்லாத மதங்களும், வாஸ் அடிகளும்**

யோசப்வாஸ் அடிகள் பிறமதங்கள் மட்டில் பெருமதிப்புடனும், மனித நேயத்துடனும் நடந்து கொண்டார். சுதேச மதத்துடனோ, மக்களுடனோ முன் தொடர்பற்ற நிலையில் ஆசிய மக்கள் பற்றிய தவறான கருத்தியலின் பின்னணியிலேயே போர்த்துக்கேயக் குருமார் தம் பணியை மேற்கொண்டனர். எனினும், வாஸ் அடிகள் கத்தோலிக்க சூழல் நிறைந்த கோவாவில் பிறந்து வளர்ந்தாலும், கன்னடத்தில் பணியாற்றிய காலத்திலும், ஏனைய அனுபவங்கள் வழியும் இந்து மதத்தவர்களின் ஆன்மீகம், மதப்பற்று, வாழ்க்கை முறைபற்றி நன்கு அறிந்திருந்ததால் அம்மக்களின் உணர்வுகளை மதித்தார். இதனால், எல்லா மக்களாலும் நன்கு ஏற்றுக் கொள்ளப்பட்டார். பௌத்த மன்னர்கள் இவருக்கு வழங்கிய மரியாதையும், கௌரவமும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

**வாஸ் அடிகளின் புனித வாழ்வு**

இறைவனுடனும், மனிதனுடனும் கொண்டுள்ள சீரான உறவின் செயற்பாடுகளிலேயே புனித வாழ்வு தங்கியுள்ளது. வாஸ் அடிகளின் வாழ்வு முழுவதும் அயலவர் நலன் பேணுவதிலும், இறைவனின் திட்டத்தை செயற்படுத்துவதிலும் அடங்கியிருந்தது. இலங்கையில் பரிதாபநிலையில் வாழ்ந்த கத்தோலிக்க மக்களுக்கு பல ஆபத்துக்கள் மத்தியிலும் பணியாற்ற எடுத்துக் கொண்ட முடிவும், மக்கள் குடிசைகளை நாடிச் சென்று ஆறுதலளித்து ஊக்கப்படுத்தியமையும், கண்டியில் அன்றாடம் மக்கள் பசி தீர்க்க அரிசி வழங்கியமையும், கண்டியில் அம்மை நோயின் போது அவரது மருமகன் கர்வாலோ அடிகளும், அவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதும் இவரது மக்கள் சேவையை எடுத்தியம்பும் சில எடுத்துக்காட்டுக்கள். மேலும், கண்டியில் அதிசய முறையில் பொழிந்த மழையும், மக்களும் மன்னனும் இவர் மட்டில் உயர் மதிப்பீட்டை ஏற்படுத்தக் காரணங்களாயமைந்தன.

இவரது ஆழமான ஆன்மீகப் பற்று அவரது வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்பட்டது. திருவருட்சாதனங்களை பக்தியுடன் நிறைவேற்றுவதில் திருச்சபையில் கொண்டிருந்த பற்று, ஆன்மாக்களின் மீட்பில் காட்டிய ஆழமான ஆர்வம், அன்னை மரியாவின் மட்டில் காட்டிவந்த ஆழமான பக்தி, வாஸ் அடிகள் மேற்கொண்ட கடும் தவவாழ்வு (asceticism) என்பவை அவரது துறவு வாழவின் சாதனைகளுக்குக் காரணமாயமைந்தன. இவரிடம் விளங்கிய தவப்போக்கு இந்திய ஆன்மீகப் பாரம்பரியத்தையும், எகிப்திய, லெபனான், சீரிய வனாந்தரங்களில் ஆரம்பித்து வளர்ச்சி கண்ட கிறிஸ்தவ ஆன்மீகப் பாரம்பரியத்தையும் உள்ளடக்கியதாக விளங்கியது.



வாஸ் அடிகளின் புனித வாழ்விற்கு

பலர் சான்று பகர்ந்துள்ளனர். விமல தர்மசூரியன், நரேந்திரசிம்ம என்னும் கண்டி பௌத்த மன்னர்கள், ஒரற்றோரியன் சபையின் சக பணியாளர்கள், கல்வின் மத அதிகாரி பேரற்றோ கஸ்கோன், திருத்தந்தையின் உயர்நிலைத் தூதுவர் சாள்ஸ் தெ ருணோ, இலங்கை வாழ் கத்தோலிக்க மக்கள் எனப் பல துறையினரும் சான்று பகர்ந்துள்ளனர். இவரது புனிதமான வாழ்க்கையைக் கண்ட மக்கள் இவரைச் சம்மனசுச் சுவாமி என அழைத்தனர். பேராயர் சாள்ஸ் தெ ரூணேன 26 ஆகஸ்ட் 1704 இல் உரோமுக்கு அனுப்பிய அறிக்கையில் யாழ்ப்பாணத்தில் இருந்து பாண்டிச்சேரிக்கு வந்த கத்தோலிக்கரிடமிருந்துதாம் வாஸ் அடிகள் பற்றி பல ஆச்சரியமான விடயங்களை அறிந்ததாகக் கூறியுள்ளார்.

போர்த்துக்கேய உளவாளி என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டபோதும் உண்மைநிலை அறிந்த சிங்கள மன்னர்கள் வழங்கிய ஆதரவும், உதவியும் இவர் மக்களிடையே நன் மதிப்பைப் பெறுவதற்கு உறுதுணையாவமைந்தன. பௌத்த மன்னர்களான விமலதர்மசூரியன் (1687-1707), நரேந்திர சிங்க (1707-1739) ஆகிய இருவரும் இறை மனிதனாக இவரை இனங்கண்டனர். இவரது மறைபரப்புப்பணி வெற்றியாமைந்தமைக்கு இதுவும் முக்கிய மானதோர் காரணி யாகும்.

**இறை பராமரிப்பில் ஆழமான நம்பிக்கை**

இலங்கைத் திருச்சபையை வழி நடத்தும் பொறுப்பை வாஸ் அடிகள் மேற்கொண்ட போது முக்கிய தீர்மானங்கள் எடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டபோது தம்முடன் வாழ்ந்த குருவிடம் கலந்தாலோசித்து தீர்மானம் எடுப்பதுண்டு குருக்கள் இல்லாத விடத்து பொறுப்புள்ள பொது நிலையினருடன் கலந்தாலோசித்தார் என்பது அவருடன் வாழ்ந்த குருக்களின் சான்றாகும். இலங்கைக்கான பயணத்தைப் பற்றித் தீர்மானிக்கும் முன்பு தம் ஆன்ம குருவிடமும், பயண வழியில் தூத்துக்குடியில் இயேசு சபைக் குருக்களிடமும், பணிக்களத்தில் சக குருக்களிடம் அபிப்பிராயம் அறிந்தமை, சில்லாலையில் மூப்பரின் வழிகாட்டலையும் பெற்றமை என்பனவும் குறிப்பிடப்பட வேண்டியன.

**நெருக்கடிவேளைத் தலைமைத்துவம்**

இலங்கையில் யோசப் வாஸ் அடிகள் பல கட்டுப்பாடுகள் மத்தியில் பணியாற்றியபோதும், அவரது பணி பெரிதும் வெற்றி பெற்றமைக்கு அவரிடம் விளங்கிய தலைமைத்துவப் பண்பு முக்கிய காரணிகளில் ஒன்றாகும். உலகத் திருச்சபை வரலாறோ, மறை மாவட்டங்களின் அல்லது துறவற சபைகளின் வரலாறோ தெளிவாக ஒரு உண்மையைச் சுட்டி நிற்கின்றன. ஆளுமைப் பலமுள்ள தலைவர்களின் நிர்வாகத்தில் மறுமலர்ச்சியும் வளர்ச்சியும் ஏற்பட்டவேளை பலவீனமான தலைமைத்துவத்தின் போது திருச்சபை தளர்ச்சியும், வீழ்ச்சியும் கண்டுள்ளது. திருச்சபை ஒரு நிறுவனம். எந்த நிறுவனத்தின் வளர்ச்சியிலும் தளர்ச்சியி



லும் அதனைத் தலைமை தாங்கி முன்னெடுப்பவரின் ஆளுமை கணிசமான செல்வாக்குச் செலுத்துகின்றது.

ஆயர்கள், குருக்கள், துறவிகள் மக்களை வழிநடத்தும் பணிக்குத் திருச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தலைவர்களவர். சமூகமும் இவர்களைத் தலைவர்களாக ஏற்றுக் கொள்கிறது. தலைவர்களின் பல்வேறு நிலைகளை நோக்கும் போது சிலர் பிறப்பிலேயே தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டோராகவும் மற்றும் சிலர் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களாகவும், வேறு சிலர் நியமனம் பெற்ற தலைவர்களாகவும் காணப்படுகின்றனர். திருச்சபையின் தலைவர்கள் நியமனம் பெற்றவர்களாவர்.

பல இறுக்கமான கட்டுப்பாடுகள், நெருக்குவாரங்கள் மத்தியில் மாறுவேடத்தில் இலங்கைக்குள் நுழைந்து, சிறந்த பணியாற்றிய வாஸ் அடிகள் நியமனம் பெற்ற தலைவருமல்ல தெரிவு செய்யப்பட்ட தலைவருமல்ல மாறாக இயல்பிலேயே தம்மில் தலைமைப் பண்புகளைக் கொண்டவர்.

இலங்கையில் நிலவிய சிக்கலான சூழ்நிலை பற்றியும், இலங்கைக் கத்தோலிக்கரின் பரிதாப நிலை பற்றியும் பலர் அறிந்தபோதும் எவரும் ஆபத்தான முடிவெடுத்து இலங்கைக் கத்தோலிக்கருக்கு உதவ முன்வரவில்லை. இந்நிலையிலேயே வாஸ் அடிகள் இப் பாரிய பொறுப்பை ஏற்றுச் செயற்படுத்தினார். "நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தன் உயிரைக் கொடுப்பார்."(யோவான் 10:11) என்னும் கிறிஸ்து பெருமானின் வார்த்தைக்குப் பொருள் வழங்க முன்வந்தார். இதனால் வாஸ் அடிகளை ஒரு தனித்துவமான தலைவர் எனக் கொள்வதே பொருத்தமானது.

**நிறைவுரை**

ஏழைகள், பாவிகள், பிணியாளர் மட்டில் அதிக அக்கறை காட்டுவதும், அவர்களைத் தேடிச் செல்வதும், அவர்கள் சார்பாகச் செயற் படுவதும் இயேசு எடுத்த தீர்மானம். அவரது வாழ்வில் அவர் எடுத்த இரண்டாவது முக்கிய தீர்மானம் இது என்பது கிறிஸ்து வியலாளரது கருத்து. இவ்வாறே வாஸ் அடிகள் இலங்கை சென்று அங்கு ஒடுக்கப்பட்டவர்களாகப் பரிதாப நிலையிலுள்ள கத்தோலிக்கருக்கு உதவுவதென மேற்கொண்ட தீர்மானம் அவரது வாழ்வின் பெரும் திருப்புமுனையாக அமைந்தது. இத்தீர்மானத்திற்குச் செயல் வடிவமளிக்க வாஸ் அடிகள் தூய வாழ்வு வாழ்ந்தார் என்பதற்கு பல மட்டங்களிலிருந்து சான்றுகள் முன் வைக்கப்பட்டன.

அவரது வாழ்வு, சாதனைகள் நிறைந்த வாழ்வாக அமைந்தமைக்கு அவரது புனித வாழ்வே முக்கிய காரணியாகும். ஏழையாக வாழ்ந்த கிறிஸ்துவைப் போன்று தாமும் ஏழையாகவும், ஏழைகளுடனும், ஏழைகளுக்காகவும் வாழ்ந்தார். அவரது வாழ்வு முழுவதும் இதனை எடுத்தியம்புகின்றது. திருச்சபையின் புனித பணி ஏழைகளுடனும், ஒடுக்கப்பட்டோருடனும் தம்மை ஒன்றுபடுத்துவதன் வழி வெளிப்படுகின்றது. இறைவன் ஏழையாக கிறிஸ்துவில் தம்மை வெளிப்படுத்தினார். அதே ஏழை இயேசுவே திருச்சபையை நிறுவினார். வாஸ் அடிகள் ஏழைகளிலே கிறிஸ்துவைக் கண்டார்.

**அருட்பணி ஞா.பிலேந்திரன்**
கிறிஸ்தவ நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்

# புனிதரின் பாதையில் நமது பாதங்கள்...

அ.சைலேந்தினி, ஆசிரியை, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்

மண்ணகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் விண்ணகத்தை நோக்கிப் பயணமாகும் திருப் பயணிகளாக இருக் கின்றோம். பலர் இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து கொண்டு தூய்மை பெறும் நிலையில் (உத்தரிப்பு ஸ்தலம்) இருக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் நம் இறை வேண்டலால் உதவி பெறுகின்றார்கள். வேறு சிலர் பரிசுத்த வாழ்வு வாழ்ந்து மறைசாட்சியாய் மரித்து இறைமாட்சியை அனுபவித்து கடவுள் திருமுன் எந்நேரமும் நின்று தூயவர், தூயவர் எனக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்க தகுதி பெற்றிருக்கின்றார்கள். இவர்களே புனிதர்கள் என்று அழைக்கப்படுகின்றார்கள்.

இன்று நாம் மறைசாட்சியாய் மரித்த புனிதர்களின் உதவியையும், பாதுகாவலையும் வேண்டுகின்றோம் என்றால் இது இன்று நேற்றல்ல பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்தே இருந்து வருகின்றது. திருச்சபையின் முதல் நூற்றாண்டுகளிலே திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட புனிதர்கள் அனைவரும் வேத சாட்சிகளே. வேத சாட்சிகளைத் தவிர ஏராளமான புனிதர்களும் மோட்சத்திலே புனிதர்களாக பேரின்ப பாக்கியம் அனுபவித்து வருகின்றார்கள். மோட்சத்தில் இருக்கும் புனிதர்கள் அனைவரையும் நினைவு கூர்ந்து அவர்களுக்கு இன்று நாம் விழா எடுக்கின்றோம். இவர்களது மகிமையையும், மாட்சிமையையும் திருச்சபை நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. அதாவது திருச்சபை புனிதர்களை நமது கிறிஸ்தவ வாழ்வுக்கு முன்மாதிரிகையாகவும், நம் பாதுகாவலர்களாகவும் நமக்காக இறைவனிடம் பரிந்து பேசி அருட்கொடைகளை பெற்றுத்தரும் பரிந்துரையாளர்களாகவும் கொடுத்திருக்கின்றது. இதனால் நாம் திருச்சபையோடு இணைந்து புனிதர்களை நினைவு கூர வேண்டியவர்களாயிருக்கின்றோம். புனிதர் பட்டம் பெற்றவர்கள் மட்டுமல்ல எண்ண முடியாத வேறு நீதிமான்களையும் நாம் காண்கின்றோம். அவர்கள் பழைய ஏற்பாட்டு, புதிய ஏற்பாட்டுக் காலங்களில் வாழ்ந்தவர்கள். இவர்கள் கடவுளைப் புகழ்ந்து, கடவுளுடைய செம்மறியானவரையும் வாழ்த்தி இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வு வாழ்கின்றார்கள்.

இவ் ஏற்புடைய வாழ்வுக்கு சாட்சியாகத் திகழ்ந்தவர் இலங்கையின் அப்போஸ்தலர் என அழைக்கப்படும் அருளாளர் யோசவ் வாஸ் அடிகளார். அவர் தம் பணிக்காலத்திலே மேற்கொண்ட எல்லா முயற்சிகளிலும் இறைவழி நடத்தலுக்கும், இறை பராமரிப்புக்கும் தம்மை முற்றாக கையளித்து வாழ்ந்ததனால் இன்று புனிதர் நிலைக்கு உயர்த்தப்படவுள்ளார். சிறுவயதிலிருந்தே கூர்மையான அறி வும், தேவபக்தியும் நிறைந்தவராய் விளங்கிய அடிகளார் ஏழ்மை, உலகப் பற்றற்ற வாழ்க்கை, அடக்க ஒடுக்கமான மரியாதை நிறைந்த நடத்தை, கற்பு, உபவாசம், உணவு, குடி மட்டில் இச்சை அடக்கம் போன்ற முன்மாதிரிகையான பண்புகளைத் தம் வாழ்விலே கடைப்பிடித்தார். இலங்கை வாழ் கத்தோலிக்கர்களுக்குத் தனது பணியை மையப்படுத்தி நாட்டு மக்களின் மனநிலைக்கும், கலாசாரத்திற்கும், சூழ்நிலை களுக்குமேற்ப அவர்களின் குறை, நிறைகளை அறிந்து பொருத்தமான மறை பரப்பு முறைகளைக் கையாண்டு மறை யறிவை அளித்து விசுவாசத்தில் ஊக்கப்படுத்தி சிறந்த சாட்சிய வாழ்வு வாழ உதவியாக இருந்தார்.

தனது குறிக்கோளை அடைவதற்கு ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும், விவேகத்துடனும் செயற்பட்டு இரப்போன் வேடம் பூண்டு கழுத்தில் ஒரு பெரிய செபமாலையை அணிந்து கொண்டு யாழ்ப்பாணத்திற்குள் நுழைந்தவர் பொறிக் கிடங்குகள் எங்கு எங்கு வைக்கப்ட்டிருக்கின்றன, எப்போது ஆட்சியாளர்களின் எல்லைகளைக் கடந்து தப்ப வேண்டும் என்பதை நன்கு உணர்ந்து தனிமனிதனாகப் பல்லாண்டுகள் மறைபணியாற்றினார். கத்தோலிக்க ஆலயங்கள், சின்னங்கள் அழிக்கப்பட்டு, சமய வழிபாடுகள் முற்றாகத் தடை செய்யப் பட்டு சமயத் தொண்டர்கள் விரட்டியடிக்கப்பட்டு, அருட்தந்தையர்களுக்கு அடைக்கலம் கொடுப்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு கத்தோலிக்கர் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு, சிறையிலடைக்கப்பட்ட அதேவேளை பலர் மறை சாட்சிகளாக்கப்பட்டு, கத்தோலிக்க சமயத்தை வேரோடு களைந்தெறிய முயற்சிகள் எடுக்கப்பட்ட இக்கட்டான கால கட்டத்தில் சில்லாலையிலும் அதனை அண்டிய கிராமங்களிலும் வாழ்ந்த கத்தோலிக்கர்களை ஒன்றிணைத்து, உற்சாகமூட்டி திருப்பலியையும் நிறைவேற்றினார்.

குறிப்பாக அடக்கு முறைக்குள் சிக்குண்டு துன்பத்தில் மூழ்கித் துடித்த மக்களுக்கு ஆறுதல் அளித்து துன்பத்தால் அவர்கள் துவண்டுபோக விடாது அவர்களைப் பேணிக்காத்து இன மத பாகுபாடின்றி வைசூரி நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் புண்களைக் கழுவி மருந்து கட்டி பல மனிதநேய, சுகாதார, மருத்துவப் பணிகளைப் புரிந்து தன் வாழ்வை இவர்களுடன் பகிர்ந்து, ஏழை, எளியவர்களுக்கு உறுதுணையாய் விளங்கினார். மக்களின் அன்றாட வாழ்க்கைப் பண்பாட்டுத் தளங்களிலிருந்து சமய வாழ்வை அந்நியப்படுத்தாது மக்களின் பண்பாட்டுக்கும், பாரம்பரியங்களுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் மதிப்புக் கொடுத்து அதற்கேற்ப இறை பணியாற்றிய அவர் நற்செய்திப் பணியை மேற்கொள்வதில் பொது நிலையினருக்கும் பொறுப்புண்டு எனக் கருதி திருப்பணியின் பொறுப்புக்களை பொதுநிலையினருக்கும் பகிர்ந்தளித்து தனது பணியில் பொதுநிலையினரையும் பங்காளிகளாக்கினார்.

"ஒரு அருட்பணியாளனது வாழ்வு அவன் பணி செய்யும் மக்கள் வாழ்விலிருந்து வேறுபட்டதன்று" என்பதைச் சுட்டும் முகமாக அவர் ஆணித்தரமாக வாழ்ந்து காட்டினார். இவ்வாறாக சூழல் அறிந்தும், ஒடுக்கப்பட்டோரின் ஆறுதலாகவும், பொது



நிலையினருக்கு பொறுப்புக்களை பகிர்ந்தளித்தும் மக்களின் வாழ்வோடு தம் வாழ்வை ஒன்றிணைத்து திருப்பணியாற்றிய அவர் தனது முன்மாதிரிகையான வாழ்வு, ஆழமான விசுவாசம், அர்ப்பண வாழ்வு, கடின உழைப்பு என்பவற்றின் பயனாக தனது பணி வாழ்வில் வெற்றியும் கண்டார். பல்லாண்டு காலம் தலைவர்கள் இன்றித் தவித்த கத்தோலிக்க மக்களுக்கு இவரது பணி மீள் வாழ்வை பெற்றுக் கொடுத்தது. அவரது அன்றைய அணுகுமுறையினாலே புத்துயிர் பெற்ற கத்தோலிக்கம் இன்றுவரை இலங்கையில் உயிர்த் துடிப்புடன் பல சமயத்தினராலும் மதிக்கப்படும் அமைப்பாக திகழ்கின்றது என்றால் வாஸ் அடிகளாரின் பணி மகத்தானது.

இப் புனிதரின் பணி வாழ்வானது எமது வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதா என்பதனை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்று இறை பணியாற்ற அழைக்கப்பட்ட நாம் இன்று எமக்கு கொடுக்கப்பட்ட பணிகளை மறந்து கத்தோலிக்கர் என்ற சிந்தனை கூட இல்லாமல் தமது வாழ்வை இன்றைய நவ நாகரிக உலகின் போக்குகளுக்குள் அடிமையாக்கி வருகின்றோம்.

▶ இன்று ஆன்மீகக் குருக்கள் இருந்தும், திருப்பலி ஒழுங்கான முறையிலே நிறைவேற்றப்பட்டும் ஞாயிறு திருப்பலியிலும், திருச்சபையின் முக்கிய கடன் திருநாட்களிலும் முழுமையாகப் பங்குபற்றாமல் இருக்கும் எம் கத்தோலிக்கர் மத்தியில் அன்றைய அடக்கு முறைக்குட்பட்ட கத்தோலிக்க மக்களிகளின் விசுவாசம் எங்கே?

▶ ஆலய திருவிழாக்களையும், அருளடையாளக் கொண்டாட்டங்களையும் வெளிவேடத்துடன் ஆடம்பரமாகக் கடைப்பிடிக்கும் எம் மத்தியில் அன்றைய மக்களின் ஆன்மீக மனமாற்றம் எங்கே?

▶ இன்று அற்ப ஆசைகளுக்காகவும், பதவி மோகங்களுக்காகவும், பணத்துக்காகவும் ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்தும், கொலை செய்யவும் துணிந்துவிட்ட எம் மத்தியில் கத்தோலிக்க மறைக்காக மறைசாட்சியானவர்கள் எங்கே?

▶ நவநாகரிகம் என்ற பெயரில் ஆபாச உடைகள் அணிவது, இளைஞர்களின் ஆபாச உணர்வுகளைத் தூண்டக்கூடிய விதத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் (நிலப்படம்), கணினி, தொலைபேசி, இணையம், முகப்புத்தகம் போன்ற வசதிகளைத் துஷ்பிரயோகம் செய்து பாலியல் பிறழ்வு நடத்தைகளுக்குள்ளும், விழுமிய வீழ்ச்சி கொண்ட கட்டற்ற வாழ்க்கைக்குள்ளும் சென்று கொண்டிருக்கும் எம் வாழ்வில் அன்று கலாசார, பண்பாட்டு அம்சங்களுக்கு ஏற்ப வாழப்பட்ட மறைவாழ்வு எங்கே?

▶ சில மனிதர்கள் செல்வத்திலும், பொருளாதாரத்திலும் முன்னேறி இருக்கும் அதேவேளை இன்று பெரும்பகுதியினர் வேலையில்லாமல் விடிந்தால் சாப்பாட்டிற்கு என்ன செய்வது என்ற நிலையில் பசியாலும், பட்டினியாலும் வருந்திக்கொண்டு சாப்பாட்டுப் பொருட்களின் விலையேற்றத்தால் தூக்குப் போடும் நிலையில் வாழ்க்கைச் செலவை சுமக்க முடியாது ஈரவிழிகளோடு அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மத்தியில் ஏழைகளுக்கு உதவும் பண்பு எங்கே?

▶ இன்று மது, மாது, கஞ்சா, போதைவஸ்து பாவனை என்பவற்றிற்கு அடிமையாகி தம் வாழ்வைத் தீய வழியில் இட்டுச்செல்லும் கத்தோலிக்கர்களின் வாழ்வில் அன்றைய கிறிஸ்தவ வாழ்வில் காணப்பட்ட இச்சை அடக்கம் எங்கே?

▶ இன்று தங்களுக்குள்ளேயும், குடும்பத்துக்குள்ளேயும், குழுக்களுக்குள்ளேயும், நண்பர்கள் வட்டத்திற்குள்ளேயும், இனங்களுக்குள்ளேயும், பிளவுபட்டுக்கொண்டு கட்சி மனப்பான்மையோடு வாள்களோடும், தடிகளோடும், ஆயுதங்களோடும் வெறிபிடித்து வீதிகளில் நிற்கும் கத்தோலிக்க கிராமங்களில் அன்றைய குழுமவாழ்வு எங்கே?

▶ இன்று கலப்படம், கள்ளத்தராசு, கள்ளச்சந்தை, பொருட்களைப் பதுக்கி வைத்தல் என்பவற்றில் ஈடுபடும் எம் வாழ்வில் நீதி எங்கே?

▶ எமக்கு கொடுக்கப்படும் பணி வாழ்வில், பங்குப் பணிகளில் எமது கடமைகளை நிறைவேற்றாது அலட்சியப் போக்குடன் வாழும் எம் மத்தியில் கிறிஸ்தவப் பணி வாழ்வு எங்கே?

▶ இன்று பெற்றோர், பெரியோர், குருக்கள், ஆசிரியர்கள் என்பவர்களுக்கு மதிப்பளிக்காமல் வாழும் எம் சமூகத்தில் கீழ்ப்படிதல் எனும் பண்பு எங்கே?

▶ சுயநலத்துக்காகவும், கௌரவத்துக்காகவும், பதவி மோகங்களுக்காகவும், சாதி வேறுபாடுகளுக்காகவும், பணத்துக்காகவும் மனிதர்களை துச்சமென மதிக்கும் கல்நெஞ்சங்கள் மத்தியில் மனித மாண்பு எங்கே?

▶ கடந்த கால சூழல்களால் தம் பிள்ளைகளை பறிகொடுத்துவிட்டு, நாளை என்ன நடக்குமோ என ஏக்கத்துடன் வழி மேல் விழி வைத்து தம் பிள்ளைகளின் வரவுக்காய் காத்திருக்கும் பெற்றோர், உறவுகளுக்கு மத்தியில் இரக்கம் காட்டும் உள்ளங்கள் எங்கே?

▶ நாள் முழுவதும் தொலைக்காட்சித் தொடர்களுக்கு முக்கியம் கொடுக்கும் எம் வாழ்வில் திருச்செபமாலையின் முக்கியத்துவம் எங்கே?

▶ திருமண முறிவு, திருமண பந்தத்துக்கு முரணான நடத்தைகள், பாலியல் துஷ்பியோகங்கள், வன்புணர்வுகள் மேலோங்கி காணப்படும் எம் சமூகத்தில் கற்பு எங்கே?

▶ உயர்ந்தவன் - தாழ்ந்தவன், ஏழை - பணக்காரன், படித்தவன் - படிக்காதவன், ஆண் - பெண் என்ற படிநிலை அமைப்புகள் மேலோங்கி இருக்கும் எம் சமூகத்தில் சமத்துவம் எங்கே?

▶ தொழில் வாய்ப்புகளுக்காக அரசியல் செல்வாக்குகளும், இலஞ்ச ஊழல்களும்

[தொடர்ச்சி 15ஆம் பக்கம்] >>

# யோசப்வாஸ் புனிதர் பட்டமளிப்பு விழா திருத்தந்தை வருகையை முன்னிட்டு இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபை வெளியிட்ட இலட்சினையின் விளக்கம்

## சிலுவை

இங்கு காணப்படும் சிலுவை, பழமை வாய்ந்த அநுராதபுரத்தில் தொல் பொருள் ஆய்வின் அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட புனித தோமையாரின் சிலுவையினால் உந்தப்பட்ட "இலங்கைச் சிலுவை" ஆகும். 'மகிமையின் சிலுவை 'அல்லது' உயிர்ப்பின் சிலுவை' எனப்படும் இச்சிலுவை, காய்ந்த மரச்சிலுவை எவ்விதம் உயிர்பெற்று புது வாழ்வை உண்டு பண்ணுகின்றதோ அதேபோல் இதுவும் உயிர்ப்பின் சிலுவையாகக் கருதப்படலாம். நீலத்தினால் வர்ணம் பூசப்பட்ட இச்சிலுவையானது இரண்டாம் உலக யுத்தத்தின் போது பாதுகாப்பிற்காக எமது நாட்டை இலங்கை அன்னைக்கு அர்ப்பணம் செய்த நிகழ்வை நினைவுபடுத்துகின்றது. அதுமட்டுமன்றி எமது இலங்கை அன்னை மீது எமக்குள்ள பக்தியையும் அன்பையும் வெளிப்படுத்துவதாகவும் இது அமையும். எமது இலங்கை கத்தோலிக்க கொடியிலும் இதே வர்ணமே காணப்படுகின்றது.

## தலைச்சீரா

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மரபுச்சின்னத்தில் உள்ளது போன்று இத் தலைச்சீராவிலும் வெள்ளை, மஞ்சள் வர்ணங்கள் காணப்படுகின்றன. இத் தலைச்சிறாவின் பின்புறத்தில் இருபக்கங்களிலும் தொங்குகின்ற மஞ்சள், சிவப்பு துணித் துண்டுகள் இவ்விசேட நிகழ்வுக்கு உகந்த இரு சொற்களை சித்தரிக்கின்றது "பாப்பரசர் பிரான்சிஸ்" "இலங்கை 2015"

ஆன்ம வலிமைக்கும், தலைமைத்துவ வழிகாட்டலுக்கும் உகந்தபாப்பரசரின் இத்தலைச்சீரா எமது தாய் திருச்சபையை பிரதிநிதித்துவப் படுத்துகிறது. உலகத் திருச்சபையை பிரதிநித்துவப் படுத்தும் தலைச்சிறா எமது இலங்கை திருச்சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் 'இலங்கைச் சிலுவை'க்கு பின்னணியாக அமைகின்றது.

## முத்திப்பேறு பெற்ற யோசப்வாஸ்

1995ம் ஆண்டு முத்திப்பேறு பெறப்பட்ட நிகழ்வின் போது பரிசுத்த பாப்பரசர் 2ம் அருளப்பர் சின்னப்பரினால் பிரகடனப்படுத்தப் பட்ட எமது நாட்டின் அப்போஸ்தலரான முத்திப்பேறு பெற்ற யோசேவ் வாஸ் முனிவர் இலங்கையின் சிலுவையைகையில் ஏந்திய வண்ணம் அதை சுட்டிக் காட்டுவது தெளிவு படுகின்றது. இவர், ஒல்லாந்தரின் வேத கலாபனையின் போது எஞ்சியுள்ள இலங்கைத் திருச்சபையின் உயிர் நாடியெனக் கருதலாம். காரணம் இக்காலத்தில் இவர் இலங்கையில் காலடியெடுத்துவைக்காதிருந்தால் போர்த்துக்கேய மறைபரப்பாளர்களினால் விதைக்கப்பட்ட விதைகள் அடியோடு அழிந்து போயிருக்கும். ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் யோசப் வஸ் அடிகளாரின் சகதுறவிகளின் 150 வருட சேவை, மறைபரப்பு பணியையும் விசுவாசத்தையும் வளர்க்க ஊன்று கோலாகியது.

திருத்தந்தை பிரான்சிஸ்
இலங்கை 2015
ஜனவரி 12-15

வத்திக்கான் 'சிஸ்டின்' சிற்றாலயத்தில் மைக்கல் ஆஞ்சலோவினால் வரையப்பட்ட ஓவியமாகிய 'ஆதாமின் படைப்பு'ப் போன்று, அவர் தம் வலது கையால் சுட்டிக் காட்டுவது அவதானிக்க முடிகின்றது. ஏனெனில் இதே போன்று யோசப் வாஸ் முனிவரும் அதே கை சைகையினால் கலாபனைக்கு உள்ளாகிய இலங்கைக் கத்தோலிக்க திருச்சபைக்கு உயிர் ஊட்டுகிறார். இதே வெளிப்பாட்டைத்தான் 'கரவாஜ்ஜோ' என்கிற ஓவியன் தன்னுடைய ஓவியத்தில் 'மத்தேயுவின் அழைத்தல்' என்பதில் சித்தரிக்கின்றான். இன்று கூட, இதேமொழிப் பாவனையினூடாக, அதே பணியில் ஈடுபட்டு இறை இயேசுவைப் பின் பற்றுமாறு முத்திப்பேறு பெற்ற யோசப் வாஸ் முனிவர் எம்மை அழைக்கின்றார்.

## வர்ணம் பூசிய வளைவுகள்

பாப்பரசரின் தலைச்சீராவில் இரு புறத்திலும் காணப்படும் பழுப்புசிவப்பு நிறம், செம்மஞ்சள், பச்சை, மஞ்சள் போன்ற நான்கு வர்ணங்களும் இலங்கைக் கொடியின் வர்ணங்களுக்கு ஒத்ததாகும். மேலும் இவை, எமது நாடு பல இன, மதங்களைக் கொண்டது என்பதை சித்தரிக்கின்றது. தலைச்சீராவில் காணப்படும் இவ்வர்ணங்களின் வளைவுகள் தலைச்சீராவைப் பற்றிக் கொள்ளும் இரு கரங்களைப் போன்று காட்சி தருகின்றன. அத்துடன் இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையான நாம், பாப்பரசர் பிரான்சிஸை மிகவும் அக்களிப்புடன் எம் மத்தியில் வரவேற்கின்றோம் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

## அழைப்பு

இம் முழு அமைப்பும் ஒரு தாமரை மொட்டைப் போன்று காட்சி தருகின்றது. இலங்கைத்தேசிய மலராகிய நீலத்தாமரை போன்று இது அமைகின்றது. இந்த அமைப்பின் நடுவே கண்ணீர்த் துளி அல்லது முத்துப் போன்று அமைந்துள்ள வடிவம் நம் தாய் நாட்டிற்கு வழங்கப்பட்ட "ஆசியாவின் கண்ணீர்த் துளி", "இந்து சமுத்திரத்தின் முத்து" என்பதை நினைவூட்டுகின்றது.

இறுதியாக

## இவ்இலட்சினை தெளிவுபடுத்துவது:

இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையானது எம் பிரதான ஆயனாகிய பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்வது மட்டுமல்லாமல், அவரைப் பெருமகிழ்வோடு எம் மத்தியில் வரவேற்கின்றது என்பதாகும்.

# திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடைய வாழ்க்கைச் சுருக்கம்



1936ஆம் ஆண்டு மார்கழி மாதம் 17ஆம் திகதி ஆர்ஜென்டினாவின் புவனோஸ்ஏய்ரெஸ் எனும் இடத்தில் பிறந்த இவர், 1969ல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பின்னர் 1973-1979 வரையான காலப்பகுதியில் இயேசுசபையின் ஆர்ஜென்டினா மாநிலத் தலைவராகப் பணியாற்றினார். 1998ஆம் ஆண்டு வவூனோ ஏய்ரெஸின் பேராயரான இவர் 2001ல் 2ஆம் ஜோன் போல் திருத்தந்தையால் கர்தினாலாக உயர்த்தப்பட்டார். இறுதியில் 2013ஆம் ஆண்டு பங்குனி மாதம் 13ம் திகதி திருத்தந்தையாக தெரிவு செய்யப்பட்டார். இவரே உலகின் தென் துருவத்திலிருந்து வந்த முதல் திருத்தந்தையும், 1272 வருடங்களுக்குப் முன்னர், அதாவது கி.பி.741ல் தெரிவாகிய திருத்தந்தை 3ஆம் கிரகோரியாருக்கு பின்னர் தெரிவான ஐரோப்பியரல்லாதவருமாவர். திருத்தந்தை பிரான்சிஸ் திருச்சபையின் கண்கண்ட தலைவராகவும், உரோமாபுரியின் ஆயராகவும் அதேவேளை உலகின் மிகச் சிறிய சுதந்திர நாடான வத்திக்கான் நாட்டின் (அளவாலும் சனத்தொகையினாலும் சிறியது) தலைவராகவும் உள்ளார்.

[புனிதரின் பாதையில் தொடர்ச்சி...]

இடம்பெறும் எம் மத்தியில் சம உரிமை எங்கே?

இதுதான் எமது கத்தோலிக்க விசுவாசமா? வாஸ் அடிகளார் அன்று பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில் பல கனவுகளோடு எம் மத்தியில் நிலை நிறுத்திய கத்தோலிக்க விசுவாசத்தின் அடித்தளம் இதுதானா? இந்நிலை களையப்பட வேண்டும். மனித வாழ்வு என்பது புனிதம் நிறைந்ததாக இருக்க வேண்டும். அதற்கு நாம் புனிதரின் வாழ்வை எமது வாழ்வுக்கு அடித்தளமாக்கி இயேசுவுக்கு சாட்சிகளாய் திகழ வேண்டும். எமது கிறிஸ்தவ வாழ்வானது அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டுமெனில் அடிகளாரின் வாழ்வில் காணப்பட்ட முன்மாதிரிகையான பண்புகளை நாமும் கடைப்பிடித்து வாழ வேண்டும். எமது வாழ்வை நாம் மாற்றியமைக்க வேண்டும்.

அனைத்துப் புனிதர்களும் மரித்த பின்பும் தொடர்ந்து இறைவனின் பணியை ஆற்றிடும் பெரும் பாக்கியத்தைப் பெறுகின்றார்கள். அதேபோல நாமும் இறைவனின் பணியை தொடர்ந்தாற்றும் பேறுபெற்றவர்களாக மாற அடிகளாரின் துணையை நாட வேண்டும். புனிதராக உயர்த்தப்படவிருக்கும் வாஸ் அடிகளாரின் வாழ்வை எமக்கு முன்மாதிரிகையாகவும், அவரை எம் பாதுகாவலராகவும் கொண்டு ஒரே மனத்தோடு நாம் மூவொரு இறைவனை வழிபட வேண்டும். எமது துன்ப நேரங்களில் அடிகளாரின் உதவியை நாடவும், இப்புனிதர் வழியாக நாம் பெற்றுக் கொண்ட நன்மைகளுக்காக நன்றி செலுத்தவும் நாம் முன்வர வேண்டும். எளிய மனத்தோராய், சாந்த குணம் நிறைந்தவர்களாய், வேதனைகளில் பொறுமை,

நீதி, அனுதாபம், கற்பு, துன்பங்களில் சகிப்பு எனும் புண்ணியங்களை அனுசரித்து வாழ வேண்டும். எமது உழைப்புக்களிலும், பிரச்சினைகளிலும் இயேசுவிடமே நாம் இளைப்பாற்றி காணவேண்டும். புனிதர்களின் சமூக உறவால் அடிகளாருடன் நாம் உறவு கொண்டிருக்கின்றோம். இந்த உறவை பயன்படுத்துவோம். அவரது உதவியை நாடுவோம். இந்த மண்ணுலகில் வாழும் வாழ்வை அர்த்தமுள்ள விசுவாச வாழ்வாக மாற்ற விண்ணகத் தந்தையிடம் எமக்காக பரிந்து பேசும்படி கேட்டு புனிதரின் பாதையில் நமது பாதங்கள் பயணிக்கட்டும்.

## வாழும் புனிதரே! எமை ஆளும் தந்தையே! – நவாலியூர் நாயகி

வாழும் புனிதரே! எம்மை ஆளும் தந்தையே! - கடல்
சூழும் இலங்கைத்தாய் பெற்றெடுத்த பிள்ளைகள் யாம்
பெருகும் உவகையினால் பூரித்து மனம் நிறைந்து
வருக! வருக! என வாயார வாழ்த்துகின்றோம்

போரின் பிடிக்குள்ளே சிக்கிய வன்னி மக்கள்
யாரின் துணை எமக்கு இனி? என்று தவிக்கையிலே
'நான் வருவேன் இலங்கைக்கு' என்று சொன்ன வாக்கின்படி
வந்தவரே! நல்லவரே! வருக! வருக! தந்தாய்!

வெண் கொற்றக் குடையின்கீழ் ஆட்சி செய்யும் மன்னவனே
எப்படையும் உமக்கு இல்லை இறைவனின் அருள் அன்றி
மும்மகுடம் முடியாகச் சூடி எமை ஆட்சி செய்ய
பொன்மகனே! உமக்கு அந்த வழுவாவரம் துணையே

வறுமையின் வடிவழகன் புனித பிரான்சீசை
வழிகாட்டியாய்க் கொண்ட வள்ளலே தந்தையே!
மாளிகையை நீர் துறந்து எளிமையாய் ஓரிடத்தை
வாழிடமாய் தெரிந்து கொண்ட பெருந்தன்மை யார்க்கு வரும்?

திருச்சபைக்குள் பிளவுகள் இன மத குரோதங்கள்
அனைத்தையும் களைந்துவிட இறக்கை கட்டிப் பறப்பவர் நீர்
குருக்கள் செய்தாலும் குற்றம் குற்றமென்று
அவர்க்காய் மன்னிப்பை இரந்து நிற்கும் திருவுருவே!


இலங்கை அப்போஸ்தலர் ஜோசப்வாஸ் முனீந்திரனை
புனிதராய் நிலைப்படுத்தும் திருச்சடங்கை நிறைவேற்ற
இலங்கை மண்ணில் கால்பதிக்கும் ஈடில்லாத் திருத்தந்தாய்!
கலக்கம் இனி எமக்கு இல்லை கடவுளாய் உமைக் கண்டோம்.

எங்களுக்கும் ஒரு புனிதர் என்று நாம் பெருமை கொள்ள
இங்கு வந்து அருள் புரிந்த தந்தையே! உம் வரவால்
வரலாறு பதிக்கின்றாள் இலங்கைத்தாய் என்று சொன்னால்
மிகையென்று யார் சொல்வார்? யதார்த்தம் அதுவன்றோ!

அதிரடிப் புனிதராய் அகிலத்தின் கண்களுக்கு!
பறக்கும் வெண்புறாவாய் மோதுகின்ற நாடுகட்கு
புரட்சித் தலைவனாய் பூமி எங்கும் பேசுகின்ற
புனிதரே! தந்தையே! உன் பொன்னடிகள் போற்றுகின்றோம்

புனித யோசப் வாஸ் அடிகளின் பற்றிய **"தடைக்கற்கள் புனிதர் வாழ்க்கையில் படிக்கற்களாக..."** எனும் தலைப்பில் அருட்தந்தை மங்களராஜாவின் தொடர் கட்டுரை தை மாதம் முதல் தொடர்ச்சியாக வெளிவரும் என்பதை அறியத்தருகின்றேன் - ஆசிரியர்

# கோவாவில் உள்ள
# புனித யோசப் வாஸின் பதிவுகள் சில...


புனித யோசப் வாஸ் அடிகளார் அருட்சாதனங்கள் பெற்றுக் கொண்ட ஆலயத்தின் முகப்புத் தோற்றம்

புனித யோசப் வாஸ் அடிகளார் வாழ்ந்த மனை


புனிதர் பயன்படுத்திய சிலுவை அவரது இல்லத்தில் அமைந்துள்ள சிற்றாலயத்தில்



புனித யோசப் வாஸ் அடிகளாரின் தாயாரின் இல்லத்தில் அமைந்துள்ள புனிதரின் சிற்றாலயம்


சங்கோலா - கோவாவில் புனிதர் வாழ்ந்த பங்கு ஆலயம் புனிதரின் பேரில் இன்று

**எம் தேசத்தின் புனிதரே! எங்களுக்காக பரமதந்தையிடம் பரிந்துரைப்பீரே!!**